
விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 12 புதன்கிழமை (25.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 096

# வான், எறிகணைத் தாக்குதல்களில் வன்னியில் நேற்று 108 பேர் பலி

## 125க்கும் அதிகமானோர் காயம்

(வவுனியா)

வன்னியில் நேற்று நடத்தப்பட்ட வான்குண்டு மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் 101 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 125க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)



## மனித உரிமை கண்காணிப்பாளர்களை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்



### நவநீதம்பிள்ளை வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையில் மனித உரிமை மீறல்களைக் கண்காணித்து அங்கு மனித உரிமை நிலைவரம் குறித்து ஆய்வு செய்ய மனித உரிமைக் கண்காணிப்பாளர்களை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்கள் மீதான தாக்குதல்கள் மனித உரிமை கண்காணிப்பகம் கண்டனம்

(பாரிஸ்)

இலங்கையின் வன்னிப் பகுதியில் அரசாங்கப் படையினர் தொடர்ச்சியாக மக்கள் நிலைகள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருவதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது என ஏ.எப்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மக்கள் நிலைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்படுவதில்லை என அரசாங்கம் மறுப்புத் தெரிவித்து வருகின்ற போதிலும் மோதல் தவிர்ப்பு வலயத்தில் இடம்பெறும் சேதங்கள் அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2 மாதங்களில் சுமார் 2ஆயிரத்து 700 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகமாக (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தை திசை திருப்பவே ஜனாதிபதி அவசர அழைப்பு

### கூட்டமைப்பினர் கருத்து

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீது சர்வதேசத்திற்கு எழுந்துள்ள அனுதாபத்தை திசை திருப்பவே ஜனாதிபதி தம்மை சந்திக்க அழைத்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்தில் பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் அழைப்பை அடுத்து நேற்று கூடி விவாதித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழு முடிவின்றி கூட்டத்தை இன்றுவரை ஒத்திவைத்தது.

நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது தொடர்பில் (12ஆம் பக்கம் பார்க்க)

## 2 கி.மீற்றர் தூரத்தில் இரு தரப்பும் மோதல்

(கொழும்பு)

படையினர் இன்னும் இரண்டு கிலோ மீற்றர் முன்னோக்கிச் சென்றால் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்படும் பாதுகாப்பு வலயத்தை அடைந்து விடுவர்.

இந்நிலையில் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதிகளில் இரு தரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன என்று (12ஆம் பக்கம் பார்க்க)

## வெதுப்பக உணவுப்பொருள் நஞ்சானதால் மாணவர்கள் உட்பட 176 பேர் பாதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் வெதுப்பகம் ஒன்றில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் நஞ்சானதால் அதை உட்கொண்ட 176பேர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

திருகோணமலையில் உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டுவரும் இரண்டு வெதுப்பகங்களின் உணவில் விசத் தன்மை ஏற்பட்டதை அடுத்தே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இரண்டு வெதுப்பகங்களுக்கும் சீல் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்து அமைப்புகளின் ஒன்றிய பிரதிநிதிகள் நலன்புரி நிலையங்களுக்கு நேரடி விஜயம்

### உதவிப் பொருட்களும் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு யாழ்ப்பாணம் இந்து அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் நேரில் சென்று உதவிப் பொருட்களை நேற்றுக் கையளித்தனர்.

நல்லை ஆதீனத்திலிருந்து புறப்பட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் திருநகர், (12ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்
unicef

## யாழ்.குடாநாட்டுக்கு ஏ-9 பாதையூடாக 300 மெ. தொ. பொருட்கள் வருகிறது

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுக்கு ஏ-9 வீதியூடாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் இரண்டாவது வாகனத் தொடரணி 300 மெற்றிக் தொன் பொருட்களுடன் நாளை 26 ஆம் திகதி கொழும்பிலிருந்து பயணமாகும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி. திவாரட்ன தெரிவித்தார்.

இந்த அத்தியாவசிய உணவுப்பொருட்கள் 20 லொறிகளில் அனுப்பி வைக்கப்பட விருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த 8ஆம் திகதி முதலாவது வாகனத் (12ஆம் பக்கம் பார்க்க)

4R-10 /= மட்டுமே
10X15=75/-
அல்பங்கள், பிலிம் ரோல் போன்றனவற்றையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, நெல்லியடி.
(C-2219)

# மஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடர்

## நிலோசன் ஹட்ரிக் விக்கெட் பதிவு; கண்டி சென்.அன்ரனீஸ் சுருண்டது

## மழையால் யாழ்.சென்.பற்றிக்ஸ் ஏமாற்றம்

(கண்டி)

எம்.டி. சஜீந்திரன்,எம்.ஏ. நிலோசனின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் கண்டி சென். அன்ரனீஸ் கல்லூரி அணி 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

எனினும் இப் போட்டி மழை காரணமாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி துடுப்பெடுத்தாடாமல்போக போட்டி இன்று மறுபடியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அணிகளுக்கிடையிலான மஞ்சி கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட விலகல் முறையிலான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில், கண்டி சென் அன்ரனீஸ் கல்லூரியும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதியது.

யாழ்ப்பாணத்தில் மற்றிங் ஆடுகளத்தில் விளையாடிய யாழ் .சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி புற்தரை ஆடுகளத்தில் ஆடுவதால் கண்டி சென் அன்ரனீஸ் கல்லூரி அணி சாதகமாக பயன்படுத்த எதிர்பார்த்தது.

அப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி அணி சஜீந்திரன், நிலோசன் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 42.1 ஓவர்களில் 152 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் வூட்ஸ் 36, வெற்றிக்கே 32 மற்றும் பலிக்கார 26 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் எம்.டி.சஜீந்திரன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை சாய்த்ததுடன்அணித் தலைவர் எம்.ஏ நிலோசன் 9 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து அடுத்தடுத்து மூன்று பந்துகளில் தொடர்ச்சியாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஹட்ரிக் விக்கெட்டை பதிவு செய்தார்.

இந்நிலையில் மழ்ழ காரணமாக யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி துடுப்பெடுத்தாட களமிறங்காத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டு இன்று மீண்டும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

இதே வேளையில் இன்று மழை தொடருமானால் நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றி தீர்மானிக்கப்படும்.

(ச-5)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.குமரேசவரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ்,யாழ் மாநகரசபையின் முன்னாள் சித்த வைத்திய அதிகாரி செல்வி கமலாதேவி பொன்னையா,கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் ச.வாமதேவன்,தீவக கல்வி வலய முதன்மை ஆசிரியர் சு.தீசநாயகம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-4)



வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு உதவும் பொருட்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தினரால் 50ஆயிரம் ரூபாய்,இந்து அமைப்புகளின் ஒன்றியத்திடம் கையளிக்கப்பட்டது. அந்நிதியினை பெரியாழ்வார் ஆச்சிரம மடாதிபதி வை.ஆனந்தராஜா நல்லை ஆதீன முதல்வரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

## நலன்புரி நிலையங்களில் முறைப்பாட்டுப் பெட்டிகள்

(வவுனியா)

இடம் பெயர்ந்து வவுனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் குறை நிறைகளை அறிந்து கொள்வதற்கு முறைப்பாட்டு பெட்டிகளை அந்தந்த நலன்புரி நிலையங்களில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நோர்வே நாட்டின் அகதிகளுக்காக பேரவையின் நிதி உதவியில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த முறைப்பாடு பெட்டிகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வவுனியா அரசாங்க அதிபரிடம் உத்தியோக பூர்வமான நோர்வே நாட்டின் அகதிகளுக் காக பேரவையினர் ஒப்படைத்துள்ளனர்.

இந்தப் பெட்டிகள் வவுனியா பிரதேச செயலாளர், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் ஆகியோரின் ஊடாக அந்தஅந்த நலன்புரி நிலையங்களில் வைக்கப்படும் என்று அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து இருந்து வவுனியாவுக்கு வந்துள்ள பொதுமக்களில் 60 வயதுக்கு மேற்பட்ட பொது மக்களை உறவினர்கள் தங்களுடன் அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச செயலகத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலுக்கு அமைய 60 வயதுக்கு மேற்பட்டவர்களை அவர்களின் உறவினர்கள் கிராம சேவையாளரின் அனுமதியுடன், அரச அதிகாரிகளின் அனுமதியுடன் வெளியில் அழைத்து செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச-5)


**Family Super Spot**

**ஃபமிலி சுப்பர் ஸ்பொட்**

பிஸ்கட், பால்மா, சொக்லேட் மற்றும் சிற்றுண்டி வகைகள் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நீங்களும் அதிர்ஷ்டமுள்ள குடும்பமாய் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

யாழ்.வீதி, மானிப்பாய் (சந்தை அருகில்)

(C-2217)


## தையல் நிலைய திறப்பு விழா

மாதகல் பிரதேசத்தில் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தையல் சுய தொழில் பயிற்சியினைப் பயின்ற யுவதிகளுக்கான தையல் நிலைய திறப்புவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மாதகலில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரித்தாஸ் - கியூடெக் இயக்குநர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமாரும் சிறப்பு விருந்தினராக மாதகல் பங்குத்தந்தை அருட்பணிஎஸ்.ஆனந்த குமாரும் கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர், கரித்தாஸ் -கியூடெக் திட்ட இணைப்பாளர் செல்வி மரியரட்ணம் பத்மசேகரி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத் தையல் நிலையத்துடன் ரூபாய் நான்கு இலட்சம் பெறு மதியான தை யல் உபகரணங்களும் கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத் தினரால் இலவசமாக வழங்கப்ப ட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-14)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

மஹோற்சவத்தில் தேர் உற்சவம் சித்திரை மாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (ச-4)

## ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள் விழா

நயினாதீவு மலையடி ஸ்ரீ ஐயனார் ஆலயத்தின் ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள் விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் முத்தையா மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அடியார்களது பொங்கல் நிகழ்வுகளும் விஷேட அபிஷேக ஆராதனைகளும் 'வினை தீர்க்கும் வேலவன் அருள் கொடுக்கும் ஐயனார்' என்னும் விடயத்தில் இராசையா ஸ்ரீசிறிதரனின் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றுகையாளர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## துப்பாக்கிச் சூட்டில் விமானப்படை வீரர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை மொரவெல பிரதேசத்தில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச்சூட்டில் விமானப்படை வீரர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வழமை போல் அதிகாலை வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த விமானப்படையினர் மீதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பொது மக்கள் போல் ஊடுருவிய விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு அந்தப் பகுதியிலுள்ள காட்டுக்குள் தப்பிச் சென்றதாகவும் கூறப்படு கிறது. (ச-5)

## துங்கம்மா அப்பாக்குட்டியின் பெயரில் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வந்த பாடசாலை கடந்த 9ஆம் திகதியிலிருந்து யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற்றுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இறையடி சேர்ந்த துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெயரில் மேற்படி பாடசாலையை செயற்படுத்த விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்காக, புதிதாக அமைக்கப்படும் வதிவிடத்திற்கு அருகிலுள்ள பெறுமதி வாய்ந்த இரண்டு மகோகனி மரங்கள் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏல விற்பனையில் குறிப்பிட்ட மரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்தி பழைய பூங்கா வளாகத்திலிருந்து மரங்களை ஒரு வாரத்தினுள் அகற்றுதல் வேண்டும். மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(C2224)


**திருமணற்காட்டில் தீர்வு கொண்டு தேரிலேறி வருகிறாள்!**



வேதனை விளைப்பதா தாயே! உனக்கின்னும் வேலையம்மா!
வெம்பிப் புலம்பி வீறிட்டு அழுவது உனக்கின்னும் கேட்கலையா..!
சாதனை செய்திடும் சரித்திரம் படைத்தவளும் நீயல்லவா
சாம்பவியே! சங்கரியே! இந்தச் சன்னதங்களேனம்மா
பாதகங்கள் ஓங்கிட தாயே! நீயின்னும் பார்த்திருப்பதா
பணிவோர் துயர் தீர்க்க பறந்தோடி வந்திடம்மா
வேதகியே வேண்டும் வரமீயும் கும்பத்து நாயகியே!
விண்ணப்பம் ஏற்றருள காரைத் தேரிலேறி வருக தாயே!



- மதுரகவி. காரை, எம்.பி.அருளானந்தன்

(2431)

(இன்று (2009.03.25) புதன்கிழமை காரைநகர் திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்மநாயகி முத்துமாரியம்பாள் தேர்த்திருவிழா)

# இன்று ஒரு தகவல்

## மன நோயாளிகள்

ஒருவர் மிகவும் கவலையுடன் வந்தார்.

“ஏன் இப்படி ஒரு மாதிரியாக வருகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“என்னைப் பார்த்து ஒருவன் பைத்தியம் என்று சொல்லி விட்டான் சேர். அதுதான் நான் இப்படி ஆகிவிட்டேன்” என்றார்.

“அதற்காக நீங்கள் பெருமைப்படுங்கள்!” என்றேன்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் என்னை ஒரு மாதிரிப் பார்க்க ஆரம்பித்தார்.

நான் ஓஷோ சொல்லியிருக்கும் சில கருத்துக்களை அவரிடம் கூறினேன்.

இந்த உலகத்தில் பல பெரிய மேதாவிகள் எல்லோரும் சாதாரண மக்களின் கண்ணுக்குப் பைத்தியமாகத்தான் தெரிந்திருக்கிறார்கள்.

ஏனெனில் மற்றவர்கள் போல் அவர்கள் கவலைப்படுவதில்லை. எதற்கும் இறுக்கம் அடைவதில்லை. சாவைக் கண்டு பயப்படுவதில்லை. அற்பமான மகிழ்வுக்கு ஆசைப்படுவதில்லை.

அவர்கள் முழுமையாக வாழ்கிறார்கள். மற்றவர்களை இது பாதிக்கிறது. ஏனெனில் இவர்களால் அவர்கள் போல் அலட்டிக் கொள்ளாமல் இருக்க முடிவதில்லை. அதனால் வெறுக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

“அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்’ என்று சொல்லி அவர்களுக்குள் ஆறுதலடைய முயற்சி செய்கிறார்கள்.

ஓர் உண்மை தெரியுமா?

இந்த உலகத்தில் பைத்தியக்காரர்களும் புத்தி சுவாதீனம் இல்லாதவர்களும் தான் மகிழ்ச்சியாகவும், கொண்டாட்டமாகவும் இருக்க முடியும்..

அதனால் நமக்கெல்லாம் புத்தி சுவாதீனத்துடன் கூடிய ஒரு பைத்தியக்காரத்தன்மை இருப்பது நல்லது தான்.

அப்படி இருந்தால் தான் வாழ்க்கையை கொண்டாட முடியும்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருவர் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார். சேர்ந்து ஒரு வருடமாகிவிட்டது. தான் குணமாகி விட்டேன் என்பது அவருக்குத் தெரிந்து விட்டது. டாக்டரிடம் விபரத்தைக் கூறினார்.

அதற்கு டாக்டர், “நீங்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கும். இருந்தாலும் உங்களை இங்கேயே வைத்திருந்து சில சோதனைகளெல்லாம் செய்து பார்த்துவிட்டு வீட்டுக்கு அனுப்புகிறோம்” என்றார்.

அதேபோல் சோதனைகளெல்லாம் செய்து பார்த்தார் இவர் சொல்வது உண்மைதான் என்று தெரிந்தது வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அதன்பின் இவர் தன்னுடைய அனுபவங்களைக் கூறினார்.

“எப்படி இருந்தது மருத்துவமனை வாழ்க்கை?” என்று கேட்டனர் நண்பர்கள்.

அதற்கு இவர், “நான் ஒரு வருடம் பைத்தியங்களோடு பைத்தியமாக வாழ்ந்தேன். அதில் கொஞ்சம் கூட சிரமம் தெரியவில்லை. ஆனால் நான் புத்தி தெளிந்த பின்னரும் ஒருவாரம் அவர்களுடன் இருந்தேன். அந்த ஒரு வாரம் தான் எனக்கு ஒரு யுகமாகத் தெரிந்தது. அவ்வளவு கஷ்டம்!” என்றார். அதனால் ஒரு கூட்டத்திலிருந்து வேறுபட்டு வாழ்வது என்பது கொஞ்சம் சிரமம் தான்.

பைத்தியங்களுக்கு மத்தியில் பைத்தியமாக இருந்து விடலாம். பைத்தியங்களுக்கு மத்தியில் புத்தி சுவாதீனம் உள்ளவனாக இருப்பதற்கு மிகவும் சாமர்த்தியம் தேவைப்படுகிறது.

ஹிட்லர் ஒரு சமயம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார். அங்கு மனநோயாளிகளையெல்லாம் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தார்கள்.

அவர் வந்தவுடன் எல்லோரும் ‘ஹிட்லர் வாழ்க!’ என்று கத்த வேண்டும் என்று அங்கிருந்த டாக்டர் சொல்லி வைத்திருந்தார்.

ஹிட்லர் வந்தார். சொல்லிவைத்தது போலவே எல்லோரும் கத்தினார்கள். ஒருவர் மட்டும் அமைதியாக இருந்தார் ஹிட்லர் அவரிடம் போய், “ஏன் நீங்கள் மட்டும் ஹிட்லர் வாழ்க என்று சொல்லாமல் நிற்கிறீர்கள்?” என்றார்.

அதற்கு அவர் மெதுவாக, “நான் பைத்தியக்காரன் இல்லை டாக்டர்” என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகப் பணிகள் நிறைவு

2009 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான இலவச பாட நூல் விநியோகப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான பாடநூல் விநியோக நடவடிக்கைகள் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஒரு சில பிரதேசங்களில் பாடசாலைகளுக்கு முழுமையான பாட நூல்கள் விநியோகிக்கப்படவில்லையென கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவல்களைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள வலயக் கல்விப் பணிமனைகளின் ஒத்துழைப்புடன் நடமாடும் சேவையை மேற்கொண்டு பாடசாலைகளுக்கு கிடைக்கப் பெறாத பாடநூல்கள் விநியோகம் செய்யப்பட்டதாகவும் இலவச பாட நூல் விநியோக நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடம் 33 மில்லியன் பாடநூல்கள் தேவைப்பட்டதாகவும் அதில் 26.5 மில்லியன் பாடநூல்கள் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் அச்சிடப்பட்டதாகவும் மிகுதித் தொகை பாடநூல்கள் வேறு சில திட்டங்களினூடாக அச்சிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலவச பாடநூல் அச்சிடல் மற்றும் இதர நடவடிக்கைகளுக்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும், வடக்கின் விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து வந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஓ-5)

# கல்வி கட்டமைப்பை மீளாய்வு செய்ய புதிய ஆணைக்குழுவை ஏற்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)


தற்போதைய கல்விக் கட்டமைப்பை மீளாய்வு செய்வதற்காக சிறந்த கல்வியாளர்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்றை ஏற்படுத்துமாறு அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு கல்விச் சேவைகள் ஆணைக்குழுவை நிறுவி, ஆசிரியர் நியமனம் பதவி உயர்வு, பதவி நீக்கம், இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று விடயங்களை திறம்பட மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சிடம் இச் சங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ளது.

இவ்வாணைக்குழுவானது சிறந்த கல்வியாளர்கள், தொழிற் சங்க அதிகாரிகள், சட்டம் மற்றும் அமைச்சு அதிகாரிகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டுமென வும் இச் சங்கத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று விடயங்கள் போன்ற நடவடிக்கைகள் தற்போதைய நடைமுறையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெற்றியளிக்காத செயற்பாடாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைகள் கருத்திற் கொள்ளப்படும் போது ஏறக்குறைய 10 ஆயிரம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் 2 இலட்சம் ஆசிரியர்கள் பயனடைவார்கள் என அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஓ-5)



யாழ். ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் புனரமைப்புக் கூட்டத்தில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

## இராசி பலன்

25.03.2009
(பங்குனி 12, புதன்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 10.10 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 5.50 மணிவரை
இராகுகாலம் 12.15 - 1.45 மணிவரை
சுபநேரம் 4.45-6.15 மணிவரை
வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரர் கொடி
காரைநகர் மணற்காடு மாரியம்மை தேர்

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, எடுத்தகாரியம் கைகூடும், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. |
| இடபம் | பெரியோர் உதவி, செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், சுபசெய்தி. |
| மிதுனம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய முயற்சி, எதிர்பாராத செலவு, பிரயாணம். |
| கடகம் | ஆரோக்கியக் குறைவு, வீண் தொல்லை, காரிய தடங்கல், பிரயாண பயம். |
| சிங்கம் | நல்ல வரவேற்பு, இஷ்ட சித்தி, பிரயாண நன்மை, பண வருவாய். |
| கன்னி | புத்துணர்ச்சி, தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், செல்வாக்கு. |
| துலாம் | புத்திரரால் மனஸ்தாபம், உடல் நலக்குறைவு, சத்துரு ஜெயம், வியாபார நன்மை. |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக்குறைவு, அற்பர் உறவு, அதிக பிரயாசை, சுப செலவு. |
| தனுசு | வாக்குமேன்மை, காரிய சித்தி, புதிய பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை. |
| மகரம் | விவாதம், சத்துருஜெயம், நல்ல முயற்சி, தனவிரயம். |
| கும்பம் | வேலைச்சுமை, போசன சுகம், நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும். |
| மீனம் | காரிய தாமதம், கோபமடைதல், பணவிரயம், பிரயாணம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 65 |
| பச்சைமிளகாய் | 45 | 50 |
| தக்காளி | 20 | 30 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 20 | 25 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 15 | 20 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 30 | 35 |
| பெரிய வெங்காயம் | 50 | 50-60 |
| பாகற்காய் | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | 45 | 50 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 110 | 120 |
| போஞ்சி | 80 | 90 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20-25 |
| தேசிக்காய் | 160 | 170 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 40 |

## மஹோற்சவம்

(நல்லூர்)

கச்சேரி நல்லூர் வீதி பாணன் குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் அரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

மஹோற்சவத்தில் தேர் உற்சவம் சித்திரை மாதம் 9 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் நடைபெறும். (ச-4)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு வெளியிடப்படும்.

இதன் வெளியீட்டுரையை தொண்டமானாறு வீ.ம. வித்தியாலய அதிபர் வ. கணேசமூர்த்தியும், மதிப்பீட்டுரையை கனகரத்தினம் மகா. வித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தமும் வழங்கவுள்ளனர். (ஓ-35)

## சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டோருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

யாழ். மாநகரசபை பிரதேசங்களுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் சட்டவிரோத விற்பனை யில் ஈடுபட்ட 5 பேரை யாழ். மது வரித் திணைக்களத்தினர் கைது செய்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன் றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ் வழக்கினை விசாரனை செய்த நீதிவான் ஆர். வசந்தசேனன் பிரஸ்தாப நபர்கள் சட்ட விரோத குற்றச் செயலில் ஈடுபட்டமைக்காக தலா 80 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-7)

## மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினால் நடத்தப்படும் மகளிர் தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு திருநெல்வேலி கருணாலய சிறுவர் இல்லத்தில் நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சு. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. என். ஏ. ஜெயராஜன், ஜேசாக் இணைப்பாளர் ந. சுகிர்தராஜ் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கருணாலய முகாமையாளர் கே. ஞானசந்திரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-4)

# உலக உணவுத் திட்டத்தின் மார்ச் மாத நிவாரண விநியோகம்

## 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக உணவு திட்ட நிவாரணத் திட்ட த்தின் கீழ் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டோர் மற்றும் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின் குடாநாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான மார்ச் மாத நிவாரணப் பொருட்கள் வழங்கலை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்குமாறு பல. நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு யாழ். மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகள் நேற்று முதல் யாழ். மாவட்ட செயலக உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவினால் வழங்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ள திட்டப் பணிப்பாளர், சகல பல நோக்கு கூட்டுறவு சங்கங்களையும் வழங்கற் கட்டளைகளை பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்திலிருந்து பொருட்களைப் பெற்று விநியோக நடவடிக்கையினை ஆரப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். (ஓ-5)

# பரு.வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

(அல்வாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய 3 சிங்கள வைத்தியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவ்வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்பட வில்லை.

இதனால் முல்லைத்தீவில் இருந்து வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு வைத்திய பற்றாக்குறை நிலவுவதனால் அந் நோயாளர்கள் அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை அடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (ஓ-4-19)

# சகோதரனின் தகவல் தெரியாததால் குடும்பஸ்தர் தூக்கிட்டு தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வன்னியில் உள்ள தனது சகோதரன் குறித்த தகவல் தெரியாத நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கண்டி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைராசா கணேஷ் (வயது 57) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

வன்னியில் மத போதகருக்கான கல்வி கற்றுவரும் தனது சகோதரர் தொடர்பில் எந்த விதமான தகவலும் இல்லாத நிலையில் மன உளைச்சலுடன் இவர் காணப்பட்டதாகவும் சகோதரனைப் பற்றியே பேசிக்கொண்டிருந்ததாகவும் மரண விசாரணையில் அவரின் மனைவி தெரிவித்துள்ளார். (ஓ-5)

# பருத்தித்துறை பஸ் சேவை சீரின்மையால் மக்கள் விசனம்

(அல்வாய்)

பருத்தித்துறை இ.போ. ச. பஸ் நிலையத்தில் 30 பஸ்வண்டிகள் இருந்தும் இவற்றில் தற்போது 15 பஸ் வண்டிகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏனைய 15 பஸ் வண்டிகளுக்கும் ரயர், பற்றரி கிடைக்காமையினால் ஓட முடியாதுள்ளன.

மேலும், பருத்தித்துறை சாலைக்கு 5 புதிய பஸ்வண்டிகளை வழங்குவதாக போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இதுவரை ஒன்றுமே கிடைக்கவில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் விசனமடைந்துள்ளனர். (ஓ-2-19)




# "கல்வாரி யாகம்" திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை "கல்வாரி யாகம்" திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி, 2 , 4, 5 ஆம் திகதிகளிலும் மாலை 6 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## சம்பியனானது சங்கானை உதயதாரகை

(யாழ்ப்பாணம்)

மாதகல் காந்திஜீ விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் செந்தோமஸ் யுத் அணியினை எதிர்த்து விளையாடிய சங்கானை உதயதாரகை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி சம்பியனானது. (ஓ)

## பொதுச் சபைக் கூட்டம்

(மருதங்கேணி)

புலோலி ப.நோ. கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சங்கத் தலைவர் ந. க. கணேசலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்தில்2009/2010 ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டங்கள் சமர்ப்பித்தல் போன்ற பல திட்டங்கள் அங்கீகாரம் பெறுவதற்கு சமர்ப் பிக்கப்படவுள்ளன. (ஓ-35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை *'பக்தியும் நாமும்'* என்னும் தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் க.வீரபாகு ஆன்மீகசொற் பொழிவாற்றுவார். (ஓ-35)

## கல்வி விழிப்புணர்வு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவல கத்தினால் நடத்தப்படும் கல்வி விழிப்புணர்வு செயலமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாந்தை கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் நடை பெறவுள்ளது.

செயலமர்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராசா, சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி பி. சத்தியவாணி, சாந்தை சிற்றம்பல வித்தியாலய அதிபர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ஓ)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவத்தை வலுவூட்டல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதியும் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)



நல்லூர் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் தமிழறிஞருமான கே. வி. குணசேகரத்தின் மணிவிழா நிகழ்வில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும், பேராசிரியர் சிவலிங்கராஜா உரையாற்றுவதையும், யாழ் இந்துக்கல்லூரி அதிபர் வீ. கணேசராஜாவுடன் விழாநாயகன் பாரியார் சகிதம் அமர்ந்திருப்பதையும், விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 104

## ஹெளவரும் தமிழரும்

### உறுதிபெற்ற இனக்குழுக்கள் 900–1070

ஆனால் பிற சோழக் கல்வெட்டுக்கள் இவற்றுக்கான விடையைத் தந்துதவுகின்றன. ராஜேந்திர சோழனுடைய கரந்தைச் செப்பேடுகளின் சமஸ்கிருதப் பாகத்தில் இலங்கைப் படையெடுப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ராஜேந்திர சோழனுடைய படை இலங்கை மன்னனையும் அவன் அரசி, மகள் ஆகியோருடன் அவனது முடி மற்றும் செல்வம் ஆகியவற்றையும் கைப்பற்றியதாகவும் தன் குடும்பத்தையும் சொத்துக்களையும் இழந்த காரணத்தினால், இலங்கை மன்னன் ராஜேந்திர சோழனை அடைந்து அவன் பாதங்களில் வீழ்ந்து சரண் புகுந்ததாகவும் இதிலே கூறப்பட்டுள்ளது. கோனேரி ராஜபுரம் என்னும் இடத்திலுள்ள இன்னொரு கல்வெட்டிலே இலங்கை மன்னன் கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட செய்தி மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஊர்க்காவற்றுறைக் கல்வெட்டுக்கள்

மேலே கொடுக்கப்பட்ட சான்றுகளை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையிலும் சோழர் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. ஊர்க்காவற்றுறையில் கிடைத்த இரண்டு கல்வெட்டுக்களில் ராஜேந்திர சோழனின் படையெடுப்புப் பற்றி மேலும் சில விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டில் சோழத் தளபதி ஈழமுழுவதுங் கொண்டு ஈழத்தரசரையும் பெண்டிர் பண்டாரமும் பிடிச்சுக் கொடுபோன அதிகாரத் தண்ட நாயகனார் ஜயங் கொண்ட சோழ மூவேந்த வேளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

மற்றக் கல்வெட்டில் 'ஈழமான மும்மடி சோழ மண்டலத்து பாண்டியன் குலதனமாக வைத்த முடியும் ஈழத்தரையர் தம் முடியும் ஆங்கவன் தேவி முடியும் பெண்டிர் பண்டாரமும் பிடிச்சுக் கொடுபோன' செய்தி கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நமக்குக் கிடைக்கும் மூன்று வேறுபட்ட மூலதாரங்களின் சான்றினைக் கொண்டு ராஜேந்திர சோழனுடைய படையெடுப்பின் விளைவாக இலங்கையில் சோழராட்சி உறுதியாக நிறுவப்பட்டதை அறிய லாம். இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக இந்தியப் பேரரசு ஒன்றின் பிரதி நிதி ஆட்சிப் பொறுப்பேற்று இலங்கையை அப்பேரரசின் ஒரு மாகா ணமாகப் பிரகடனப்படுத்தி நிர்வாகம் நடத்து வதைப் பதினோராம் நூற்றாண்டின் முதற் காலில் காணமுடிகின்றது. பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் ஆதிக்கம் பரவும் வரை இத்தகைய ஒரு நிலை இலங்கையில் இருக்கவில்லை.

### சோழ - லங்கேஸ்வரர் ஆட்சி

ஜயங்கொண்ட சோழ மூவேந்தர் வேளார் தான் கைப்பற்றிய சிங்கள அரச் குடும்பத்தினரையும் செல்வங்களையும் கொண்டு சென்று ராஜேந்திர சோழனிடம் ஒப்படைத்தபோது, சோழப் பேரரசன் தனது வீரத் தளபதிக்குப் புதிய ஒரு பதவியை வழங்கத் திட்டமிட்டிருந்தான். படர்ந்து சென்று பேரரசை ஒன்றிணைத்துக் காப்பதற்கு ஒரு புதிய நிர்வாக முறை உருவாக்கப்பட்டிருந்தது.

இதன்படி, பேரரசின் மண்டலங்களை ஆளுவதற்கு அதிபதிகளைப் பேரரசன் தேர்ந்தெடுத்தான். புதிய மன்னர்களுக்கு நடத்தப்படும் முடிசூட்டு விழா போன்று ஒன்றை நடத்தி,அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபதிக்கு முடிசூட்டி அவனுக்குரிய சிம்மா சனப் பெயர் ஒன்றையும் பேரரசன் வழங்கினான்.

இப்பெயர் விசித்திரமான வகையில் அதிபதியின் மண்டலத்தில் முன்னர் ஆண்ட வம்சத்தின் பெயரையும் அல்லது சிம்மாசனப் பெயரையும் 'சோழ' என்ற் பேரரசன் வம்சப் பெயரையும் இணைத்த பெயராக அமைந்தது. எடுத்துக்காட்டாக, பாண்டி மண்டலத்துக்கு அனுப்பப்பட்ட அதிபதி சோழ - பாண்டியன் என்ற பெயரைப் பெற்றான்.

கேரளத்துக்கு அனுப்பப்பட்டவர் சோழ - கேரளன் என்ற பெயரைப் பெற்றான். அது மட்டுமின்றி, அந்தந்த மண்டலங்களில் முன்னர் ஆண்ட வம்சத்தவர் பெற்றிருந்த அபிஷேகப் பெயர்களையும் இவர்கள் பெற்றனர்.

சோழப் பேரரசர் ராஜகேசரி, பரகேசரி என்ற பெயர்களை மாறி மாறிப் பெற்றது போல், பாண்டியர் மாறவர்மன், ஜடாவர்மன் என்ற பெயர்களையும் சிங்கள வம்சத்தவர் ஸிரி ஸங்கபோதி, அபயஸலாமேக என்ற பெயர்களையும் பயன்படுத்தினர். இதற் கமைய, மும்மடி சோழ மண்டலம் என்ற பெயரிடப்பட்ட இலங்கைக்கு அனுப்பப்பட்ட சோழ அதிபதி அநுராதபுர மன்னர் பெற்ற மரபுப் பெயராகிய 'லங்கேஸ்வர' என்ற பெயரை வம்சப் பெயராகிய 'சோழ' என்பதுடன் இணைத்து, 'சோழ - லங்கேஸ்வர' என்ற பெயரையும்," 'ஸிரிஸங்கபோதி' அல்லது' அபயஸலாமேக' என்ற சிம்மாசன, பெயரையும் பெற்று ஆட்சி நடத்த ஒழுங்கு செய்யப்பட்டது. மண்டலத்தில் எல்லா நிர்வாகத் தேவைகள் தொடர்பாகவும் ஒரு சுதந்திர மன்னன் போலவே இந்த மண்ட லாதிபதிகள் ஆட்சி நடத்தினர். அத்துடன் சுதந்திர மன்னர் போல, தங்கள் ஆட்சி ஆண்டுகளில் கல்வெட்டுக்களையும் பிற ஆவணங்களையும் தேதியிட்டு எழுதினர்.

ஆனால், இவர்கள் சுதந்திர மன்னர்களைப் போல் வாழ்நாள் முழுதும் ஆட்சி நடத்தவோ தங்கள் பிள்ளைகளுக்கு வாரிசுரிமை வழங்கவோ உரிமை பெற்றிருக் கவில்லை. பேரரசன் விரும்பிய நேரத்தில் அவர்களுள் எவரையும் திருப்பியழைத்தான். ஒரு பேரரசன் இறந்த பின் இன்னொருவன் பதவியேற்றபோது, மண்டலாதிபதிகள் திருப்பியழைக்கப்பட்டு, புது மன்னனால் திரும்பவும் முடிசூட்டப்பட்டு அனுப்பப்பட்டனர் அல்லது புதிய மண்டலாதிபதிகள் அனுப்பப் பட்டனர்.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இப்புதிய நிர்வாக முறைக்கு அமைய, இலங்கையில் வெற்றி பெற்றுத் திரும்பிய ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளான் இலங்கைக்கு மண்டலாதிபதியாக முடிசூட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டான் என்று கொள்ள இடமுண்டு. இவன் மாதோட்டத்துக்குச் சென்று அங்கு வழிபாடு நடத்திய பின் ஜனநாதபுரம் எனப் பெயரிடப்பட்ட பொலன்னறுவைக்குச் சென்று சோழ – லங்கேஸ் வரன் என்ற வம்சப் பெயரையும் அபயச லாமேகன் என்ற சிம்மாசனப் பெயரையும் தாங்கி ஆட்சி நடத்தினான் என்று கூறலாம். (தொடரும்)

**வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன**

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 24

இராப்போசனம் முடிந்ததும் ஒபாமா நுளம்பு வலைக்குள் உறங்கச் சென்றார். ஆயினும் நித்திரை வரவில்லை. வெட்டுக்கிளி போடும் சத்தம் ஒருபுறம் தான்கண்ட கோழியின் மரண அவஸ்த்தை – இவைகளின் நினைவு வந்து தொல்லை கொடுத்தன.


ஒபாமா இங்கே வந்து ஆறு மாதங்களுக்குள் இந்தோனேசிய மொழியை கற்றுக் கொண்டார். பழக்கவழக்கங்கள், பாரம்பரிய கதைகள் ஆகியனவும் நன்கு தெரிந்து வைத்துக்கொண்டார். அம்மை நோய், சின்னம்மை முதலியனவும் அவரை விட்டு வைக்க வில்லை. அவரின் ஆசிரியரின் பிரம்பும் அவரை பதம் பார்த்தது. விவசாயிகளின் குழந்தைகள் வீட்டு வேலைக்காரர்களின் குழந்தைகள் என்று பலர் அவரின் நண்பர்களானார்கள். ஒன்றாக வீதிகளில் ஓடி விளையாடினார்கள்.

### பட்டம் விட்டார்கள்

லோலோ ஒபாமாவுடன் சேர்ந்து பச்சை குடமிளகாயுடன் நன்றாக சோறு சாப்பிட பழக்கினார். வெளியில் செல்லும்போதெல்லாம் அவர் நாய், பாம்பு இறைச்சிகளை அறிமுகம் செய்து வைத்தார். பொரித்த வெட்டுக்கிளி நல்ல சுவையான பொரியல். லோலோவின் இஸ்லாம் பல சமயங்களின் நம்பிக்கைகளுக்கு இடமளித்தது. மனிதன் தான் உண்ணும் உணவிலிருந்து சக்தியைப் பெறுகிறான் என்பார். அவரின் கருத்துப்படி ஒருவர் புலி இறைச்சியை உண்டால் அவருக்கு புலியின் சக்தி வந்துவிடுமாம்.

ஒபாமா தன் பாட்டன்,பாட்டிக்கு எழுதும் கடிதங்களில் தன் புதிய துணிச்சல் மிக்க வாழ்க்கை பற்றி குறிப்பிடுவார் தான் வசிக்கும் உலகம் வன்செயல் நிறைந்தது. எதிர்வு கூற முடியாதது. ஈனஈரக்கமற்றது. அவை பற்றி எழுத அவர் துணியவில்லை. அதை விளங்கிக்கொள்ளவும் அவர்களால் முடியாது என்பதால் தவிர்த்துக்கொண்டார்.

தன்தாயிடம் சில காட்சிகள் பற்றியோ அல்லது கேட்டவை பற்றியோ வினாக்களைத் தொடுத்தால் ஒபாமாவை அரவணைத்து அன்புடன் ஏதோவிளக்க எத்தனிப்பாள்.



ஆனால் அவை முழுமையான அறிவைத் தரா. அவளுக்கும் மகனுக்குப் போலவே எல்லாம் புதியவைதான். ஆனால் தாயின் அன்பு கலந்த குரல் ஸ்பரிசம் என்பன மகனின் பாதுகாப்புக்கு வலுவூட்டின.

ஆகவேதான் ஒபாமா லோலோவை நாடினார். அவர் அதிகம் பேசுவதில்லை. இருப்பினும் அவருடன் பழகுவது இலகுவானது. ஒபாமாவை தன் மகன் என்றுதான் தன் நண்பர்களிற்கு அறிமுகம் செய்வார். அவரின் உலக அறிவைக் கண்டு ஒபாமா வியப்படைந்தார். ஏழைகளுக்கு இரங்கி பணம் கொடுத்தால் அம்மாவையும் மகனையும் சேர்த்து கண்டிப்பார்.

இந்தோனேசியாவில் எங்கே திரும்பினாலும் பிச்சைக்காரர்கள் தான். பலவடிவங்களில் காட்சி தருவார்கள். அத்தனை சமுத்திரத்தில் நீங்களிடும் பிச்சை அதை நிரப்புமா என்பார். உங்களை நீங்கள் முதலில் காப்பாற்றிக் கொள்ளுங்கள். கிடைப்பதை சேமியுங்கள். நாளை நீங்களும் வீதிக்கு வரக் கூடாது அல்லவா என்று எச்சரிப்பார்.

வீட்டு வேலைக்கு வரும் கிராமப்புறத்து இளைஞர்கள் தங்கள் உழைப்பை சேமித்து ஏதாவது சிறு தொழில் தொடங்குவார்கள். லோலோ அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். அவர்களின் குறைபாடுகளை பொறுத்துக்கொள்வார். ஆனால் வீண் செலவு செய்பவர்களை, மறதியுள்ளவர்களை, அசுத்தமானவர்களை தூக்கியெறிந்துவிடுவார்.

ஒபாமாவுக்கு அவர் மல்யுத்தம் பழக்கினார். ஒருநாள் ஒபாமாவின் தலையில் முட்டையளவு வீக்கமிருப்பதை லோலோ அவதானித்து விட்டார். இளைஞன் ஒருவன் நண்பனின் பந்தை பறித்துக்கொண்டு ஓடினான், அவனைத் துரத்திப்பிடிக்க ஒபாமாவும் ஓடினார். அப்போது அவன் ஒரு கல்லை எடுத்து ஒபாமாவை நோக்கி எறிந்தான். அது அடித்து ஏற்பட்ட காயம் தான் அந்த வீக்கம். அன்று முதல் ஆரம்பித்ததுதான் அந்த மல்யுத்தப் பயிற்சி. அவரின் தாரக மந்திரம் "தற்காப்பு முறைகளை நீ நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும்" என்பதாகும்.

லோலோ தன் மனைவிக்கு ஒரு எச்சரிக்கை செய்து வைத்தார். குற்ற உணர்வு என்பது வெளி நாட்டுக்காரர்களுக்கு பாரதுரமான விடயமில்லை. அதுவும் அமெரிக்கர்கள் அது பற்றி அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. காரணம் அவர்களின் நாடுகளில் சட்டம், ஒழுங்கு ஆகியன ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமைய தத்தம் பணிகளை அறம் வழுவாது சீராகச்செய்து முடிக்கும்.

ஜம்பொன்

ஆகவே குடிமக்கள் பயமோ பாரபட்சமோ இன்றி வாழமுடியும். மக்கள் பேச்சு எழுத்து ஒன்று கூடுதல் பத்திரிகை முதலிய சுதந்திரங்களை அனுபவிக்கிறார்கள் ஆனால் இந்தோனேசியாவில் அப்படியில்லை. எண்ணத்தில் எழுந்த எதையும் அப்படியே வாய் திறந்து. சொல்லி விடமுடியாது. அடுத்த கணமே எல்லாமிழந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். (தொடரும்)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மஹிந்த திடீர் அழைப்பு

## —நோக்கம் குறித்து அரசியல் ஆய்வாளர்கள் ஐயம்—

(கொழும்பு)

தற்போதைய நிலைமைகள் குறித்து பேசுவதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

எந்தவிதமான முன் அறிவிப்பு எதுவுமின்றி கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்புக் கடிதங்கள் நேரடியாக வழங்கப்பட்டுள்ளன. நாளை வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சந்திப்பு நடைபெறும் என கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு பிரதித்தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பு குறித்து இன்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி ஆராயும் என்றும் அதன் பின்னரே சந்திப்பில் கலந்துகொள்வதா இல்லையா என்பது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் மாவை சோனதிராஜா மேலும் கூறினார்.

இதேவேளையில், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் பா. நடேசன் பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் பிரபலமான ஆங்கில பத்திரிகையான 'த ரைம்ஸ்' இதழுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் நிபந்தனையின்றி பேசுவதற்கு தயார் என அறிவித்துள்ளதை பிரித்தானியா வரவேற்றுள்ளதுடன் உடனடியாக பேச்சுக்கு செல்ல வேண்டும் என இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளது.

இதனைச் சமாளிப்பதற்காகவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பு என்றும் அவர்களுடன் இனிமேல் பேச வேண்டிய தேவைகள் எதுவும் இல்லை எனவும் மஹிந்த அரசாங்கம் கூறியிருந்தது. அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற நகரங்களை கைப்பற்றிய பின்னர் தமிழர்களின் அரசியல் சுய நிர்ணய உரிமைகளை கேலிசெய்யும் வகையிலும் மூத்த அமைச்சர்கள் கருத்துக்களை கூறியிருந்தனர்.

இந்த நிலையில் அழைப்பு விடுக்கப்பட்டமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிதானமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் எனவும் அரசியல் அவதானிகள் வலியுறுத்துகின்றனர்.

இதேவேளையில், முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் கடந்த சில நாட்களாகக் கடுமையான தாக்குதல்களை படையினருக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றனர்.

போரில் ஏற்பட்டுள்ள இந்த தற்போதைய நெருக்கடி நிலைமைகளை சமாளிப்பதற்காகவும் இந்த சந்திப்பை மஹிந்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கலாம் என கொழும்பில் அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அதே சமயம் விடுதலைப்புலிகளுடனான போருக்காக 1.6 பில்லியன்களை செலவு செய்து விட்டு மேலும் 1.9 பில்லியன்களை அனைத்துலக நாணய நிதியத்திடம் மஹிந்த அரசாங்கம் கடன் கோரியுள்ளது.

ஆனால் அவ்வளவு தொகையை வழங்குவதா? இல்லையா என்பது குறித்து அனைத்துலக நாணய நிதியம் தற்போது ஆராய்ந்து வருகிறது. இதன் பின்னணியிலும் கூட்டமைப்புக்கான அழைப்பு தொடர்பில் ஆய்வாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளையில், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தமிழர் விவகாரத்தை, பேசுவதற்கு இணக்கம் தெரிவித்து ஏனைய நாடுகளில் ஆதரவுகளையும் கோரி வருகின்றனர்.

அனைத்துலக நாடுகளின் இவ்வாறான வேகத்தை தடுப்பதற்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்பதற் கான ஒரு நாடகத்தை மஹிந்த அரசாங்கம் தற்போதைக்கு ஒழுங்கு செய்திருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக இனப்பிரச்சினைத்தீர்வு முயற்சிகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப் பட்ட அனைத்து கட்சி ஆலோசனைக்குழு கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு ஒரு போதும் அழைப்பு விடுக்கப்பட்டதில்லை என்ற விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அத்துடன் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட கட்சியும் அல்ல என்றும் மஹிந்த அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்தது.


மேலும் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிரான கடத்தல், காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல்களும், படையினரின் எறிகணைபீரங்கித் தாக்குதல்கள் மற்றும் வான் தாக்குதல்கள் மூலமான இன அழிப்பு நடவடிக்கைகளும் தீவிரமடைந்து வரும் நிலையில் தற்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்ட காரணம் என்ன என்ற கேள்வியையும் அரசியல் ஆய்வாளர்கள் எழுப்பியுள்ளனர்.

அனைத்துக் கட்சி ஆலோசனைக் குழு 107 தடவைகள் கூடியும் இன்னும் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைப் படைகளுக்கு வெற்றி என்ற மாயையில் அந்த அனைத்துக்கட்சி ஆலோசனைக்குழு தயாரித்த அரை குறைத்தீர்வுத் திட்டத்தையும் அரசாங்கம் கைவிட்டிருந்தது என்பதையும் அரசியல் ஆய்வாளர்கள் கோடிட்டு காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்பதற்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதை சமாதான பேச்சுக்கான ஒரு ஆரம்பமாகவோ அல்லது போரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களைச் செய்வதற் கான ஒரு முயற்சியாகவோ கருதமுடியாது என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் இந்த விடயங்களை கருத்தில் கொண்டு நிதானமாகவும் காலத்தின் பொறுப்பு உணர்ந்தும் செயற்பட வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். (ஓ-5)

# தி.மு.க. கூட்டணியில் பா.ம.கவுக்கு இடமில்லை



(சென்னை)

தி.மு.க தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் பா.ம.கவுக்கு இடமில்லை என்பதை முதலமைச்சர் கருணா நிதி சூசகமாக தெரிவித்துள்ளார்.

சென்னையில் இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ,மனித நேய மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

இதிலிருந்து அந்த அணியில் பா.ம. கவுக்கு இடமில்லை என்பதை அவர் சூசக மாக கூறியுள்ளார். ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் இடையே தொகுதி பங்கீடு இன்னும் ஓரிரு நாளில் முடிவடைந்து விடும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு வும் ,காங்கிரஸ் சட்ட சபை கட்சித்தலைவர் டிசுதர் சனமும் தம்மை சந்தித்து பேசிய பின்னர் கருணாநிதி அறிவித்தார்.

வேறு ஏதேனும் கட்சிகள் உங்கள் கூட்ட ணிக்கு வருவதற்கு வாய்ப்பு உள்ளதா? அந்த கட்சிகள் சேர்க்கப்படுமா என்று கேட்ட தற்கு அப்படி ஏதாவது கட்சி கூட்டணியில் சேர்ந்தால் அது குறித்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ள பா.ம.க நாளை பொதுக்குழுவில் கூட்டணி பற்றி அறிவிப்பு வெளியிடவுள்ள நிலையில் கருணாநிதி இவ்வாறு கூறியிருப்பது அரசி யல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது. (ஓ-5)

# மிகக் குறைந்த விலையில் 'நானோ' கார் விற்பனைக்கு

## தொழிலதிபர் டாடா தெரிவிப்பு

(மும்பை)

உலகிலேயே மிகக் குறைந்த விலையுடைய நானோ கார் விற்பனைக்கு வந்தவிட்டது.

ஏற்கனவே அளித்த வாக்குறுதிப்படி ஒரு இலட்ச ரூபாய்க்கு நானோ கார்கள் விற்பனை செய்யப்படும் என்றும் அடுத்த மாதம் 9ஆம் திகதி முதல் காருக்கான முன்பதிவு தொடங்கும் என்றும் தொழில் அதிபர் ரத்தன் டாடா நேற்று முன்தினம் பெருமையுடன் தெரிவித்தார்.

இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் பெரிதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது டாடாவின் நானோ கார் ஒரு லட்ச ரூபாய் விலையுள்ள இந்த கார் தொழில் அதிபர் ரத்தன் டாடாவின் கனவுத் திட்டம் இதற்கு பல்வேறு இடை யூறுகள் ஏற்பட்டன.

குறிப்பாக மேற்கு வங்கம் சிங்கூரில் அரசில் கட்சிகளின் போராட்டத்தால் கார்




தயாரிப்பு பணி கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக தொழிற்சாலையை குஜராத்துக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. உத்தரகண்ட் ,பந்த் நகரில் உள்ள டாடாவின் கார் தொழிற்சாலையிலும் கார் தயாரிக்கும் பணி தீவிரமாக நடந்து வந்தது.

குஜராத் மாநிலம் சனாந்த்தில் உள்ள தொழிற்சாலையிலும் கார் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக நானோ கார் திட்டமிட்டபடி விற்பனைக்கு வருமா என்ற சந்தேகம் எழுந்தது இந் நிலையில் மும்பையில் நானோ காரின் அதிகாரப்பூர்வ அறிமுக விழா பெரும் எதிர்பார்ப்புக்கிடையே நேற்று முன்தினம் நடந்தது. (ஓ-5)

# இறையாண்மை மிக்க நாட்டின் மீது ஒரு அளவுக்குத்தான் அழுத்தம் கொடுக்க முடியும்

## கருணாநிதியின் கருத்தால் ராமதாஸ் அதிர்ச்சி

(சென்னை)

இறையாண்மை மிக்க ஒரு நாட்டின் மீது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தான் அழுத்தத்தைக் கொடுக்க முடியுமே தவிர அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது என்று கூறிய முதல்வர் கருணாநிதியின் கருத்து ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் அளிப்பதாக உள்ளது என பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

மேலும் அவரது அறிக்கையில் இலங்கை இனப்படுகொலைப் போரைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உலகத் தமிழர்களின் குரல் உலக நாடுகளின் காதுகளில் எட்டத் தொடங்கியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் கடமையைச் செய்ய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இருக்கிறது.

இறையாண்மை மிக்க ஒரு அண்டை நாட்டில் நடக்கும் பயங்கர நிகழ்வுகளில் இந்தியா ஓரளவுக்கு மேல் தலையிட முடியாது என்ற தவறான கருத்து இதுவரை டில்லியில் தான் இருந்தது. இப்போது சென்னைக்கும் பரவி விட்டது என்பதையே முதல்வரின் கருத்து எடுத்துக்காட்டுகிறது. ஒரு நாட்டின் இறையாண்மை என்பதில் அந்த நாட்டில் வாழும் எல்லா தரப்பு மக்களையும் பாதுகாப்பதற் கான முதன்மையான பொறுப்பும் அடங்கியிருக்கிறது. உயிரிழப்பு ஏற்படும்போது அல்லது ஏற்டலாம் என்று ஜயப்படும் போது இதர நாடுகளின் போர்ப் படையின் தலையீடும் அவசியமாகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை வகுத்துத்தந்துள்ள வழிகாட்டு நெறி முறைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உள்நாட்டுப் போர் கலகம் அடக்குமுறை அல்லது அரசின் தோல்வியின் இந்த கோட்பாட்டின அடிப்படையில் தான் இதுவரை உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு நாடுகள் தலையிட்டு இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றன.

ஈராக்கில் அமெரிக்கா தலையிட்டதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா உள்ளிட்ட பன்னாட்டுக் கூட்டுப்படையினர் தலையிட்டதும் வங்கதேசப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டதும் ஐக்கிய நாடுகள் சபை வகுத்துத்தந்துள்ள அதிகாரத்தின் அடிப் படையில் தான். முன்பு இலங்கை அரசின் பொருளாதாரத்தடையால் ஈழத் தமிழர்கள் பட்டினியால் வாடியபோது இந்தியா தனது போர் விமானங்களை அனுப்பி உணவுப் பொருட்களை விநியோகம் செய்திருக்கிறது. அத்தகைய உணர்வும் துணிச்சலும் இப்போது மத்திய அரசுக்கு வேண்டும். அதற்கு முதல்வரும் குரல் கொடுக்க வேண்டும் இதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்வதை விட்டு விட்டு ஒட்டுமொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசும் அதன் முதல்வரும் முன் வர வேண்டும் இவ்வாறு அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. (ஓ-5)

# டாக்டர் ராமதாசுடன் திருமாவளவன் சந்திப்பு

(சென்னை)

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் அந்த கட்சியின் எம்.எல்.ஏ.ரவிக்குமார் ஆகியோர் நேற்று முன்தினம் மாலையில் டாக்டர் ராமதாசை சந்தித்து பேசியதாகவும் நீண்ட நேரம் இந்த பேச்சுவார்த்தை நடந்ததாகவும் தெரிகிறது.

26ஆம் திகதி பொதுக்குழுவுக்கு பிறகு அன்று மாலை 5 மணிக்கு ஒரு கூட்ட ணியை வழி நடத்தும் தலைவரை சந்திக்க பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் நேரம் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஓ-5)

# வன்னியில் அப்பாவி மக்கள் பேரவலத்தை எதிர் கொள்கின்றனர்

## ஐ.நா.சபை எச்சரிக்கை என்கிறது கார்டியன்

வன்னியில் யுத்த சூனிய வலயத்தில் சிக்கியுள்ள அப்பாவி மக்கள் பாரிய மனிதப் பேரவலத்தை எதிர்நோக்கி வருவதாகவும் இந்த நிலைமை மேலும் பாரதூரமாகக் கூடும் எனவும் ஐக்கிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக கார்டியன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் நடைபெற்று வரும் வலயத்தில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

35 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அப்பாவி மக்கள் சிக்கியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொது மக்கள் பாதுகாப்பு வலயத்தில் தொடர்ந்து தங்கியிருந்தால் அரசாங்கத்தின் எறிகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடும் எனவும் தப்பிக்க முயன்றால் புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகக் கூடும் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

யுத்த நடவடிக்கைகளின் காரணமாக குறிப்பாக அரசாங்கத்தின் எறிகணைத் தாக்குதல்களினால் நாள் தோறும் 60க்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழப்பதாக ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இது வரையில் சுமார் 3 ஆயிரம் பொது மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாள்தோறும் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும் இதன் காரணமாக பல பொதுமக்கள் பரிதாபமாக உயிர் நீப்பதாகவும் அரசாங்க வைத்திய அதிகாரி எம். சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

நாளொன்றில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் காணப்படும் வளங்களுடன் ஒப்பிடுமிடத்து இது மிகவும் சவாலான ஓர் விடயம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-5)

# யாழ். குடாநாட்டுக்கு ஏ-9 வீதி ஊடாக மேலும் ஒரு தொகுதி பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டிற்கான மற்றுமொரு தொகுதி அத்தியாவசிய பொருட்கள் ஏ-9 பாதையூடாக கொழும்பில் இருந்து அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவை ஆணையாளருடன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர், வணிக கழகங்கள் என்பன இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

தனியார் வர்த்தகர்களின் பொருட்களே இவ்வாறு 19 பார ஊர்திகளில் தென்னிலங்கையில் இருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 11 ஆம் திகதி முதற்கட்டமாக 22 பார ஊர்திகளில் யாழ்ப்பாணத்திற்கு ஏ-9 பாதையூடாக ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இதனிடையே குடாநாட்டிற்கான அத்தியாவசிய பொருட்களை கப்பல் மூலம் அனுப்பும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அத்தியாவசிய சேவை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# ஐ.நா. சபையில் சீனாவும் ரஷ்யாவும் இருக்கும் வரை இலங்கைக்கெதிராக பிரேரணை கொண்டுவர முடியாது

## அமெரிக்கா இரட்டை வேடம் போடக்கூடாது என்கிறார் அமைச்சர் டிலான்


(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் சீனாவும் ரஷ்யாவும் இருக்கும் வரை இலங்கைக்கு எதிராக எந்தவிதமான பிரேரணையையும் கொண்டு வரமுடியாது. பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயற்பாட்டில் அமெரிக்கா இரட்டை வேடம் போடக்கூடாது.

முழு உலகிலிருந்தும் பயங்கரவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என்று கூறிய அமெரிக்கா இத்தகைய செயலில் ஈடுபடக் கூடாது என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளமை மற்றும் இலங்கையின் விவகாரத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் விவாதிப்பதற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று தெரிவித்துள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது,

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம் புலிகள் ஏன் யுத்த நிறுத்த கோரிக்கையை முன்வைக்கின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.



விடுதலைப் புலி கள் ஆயுதங்களை கீழே வைப்பதாக கூறினால் இந்தியா, அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் சீனா ஆகியவற்றின் மேற் பார்வையுடன் யுத்த நிறுத்தத்துக்கு செல்லலாம்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு பக்கபலமாக இருக்கின்றன. இந்நிலையில் அமெரிக்கா எவ்வாறான ஆதரவை வழங்கினாலும் சீனாவும் ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படுகின்ற பிரேரணைகளை தடுத்து விடும்.

இங்கு முக்கிய விடயம் ஒன்றை ஆராய வேண்டியுள்ளது. அதாவது அமெரிக்கா பயங்கரவாதத்தை ஒழிக்கின்றேன் என்று கூறிக்கொண்டு ஈராக்கில் யுத்தம் புரிந்தது. அதன் போது அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி வந்தது.

ஆனால், தற்போது இலங்கை விவகாரத்துக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கின்றது. இவ்விடயத்தில் அமெரிக்கா இரட்டை வேடம் போடக்கூடாது. உலக பயங்கரவாதத்தை ஒழிக்குமாறு குரல்கொடுத்த அமெரிக்காவுக்கு இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டிய தார்மீக பொறுப்பு உள்ளது.

வன்னி பகுதியிலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வருகின்ற மக்களுக்கு அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து கொடுக்கின்றது. அங்கிருந்து மக்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் வடக்கு மீட்கப்பட்டதும் அங்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு ஜனநாயகம் நிலை நாட்டப்பட வேண்டும். அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக அதிகாரங்களை பகிர முன் வரவேண்டும்.

அதனை ஒரு தொடக்கப் புள்ளியாகக் கொண்டு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வை முன்வைக்காவிடின் வடக்கை மீட்கும் வேலைத்திட்டத்துக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும் என்றார். (ஓ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**விஷ்ணுகிராந்தி / விஷ்ணுகாந்தி**

*Botanical Name - Evolvulus alsinoides*
*Family - Convolvulaceae*
*Sing - Vishnukiranthi*

இதன் பூக்கள் கார்மேக வண்ணனுடைய நிறத்தைப் பெற்றிருப்பதால் விஷ்ணுகாந்தி என்ற பெயர் வந்திருக்கலாம்.

இது சுமார் 15, 20 செ.மீ தூரம் வரைக்கும் தரையோடு ஒட்டிப்படரும். கணுக்களில் வேர் விடுவதில்லை. சுமார் 10.மீ.மீ நீளமும், 7.மீ.மீ அகலமுமுள்ள நீண்ட விருத்த வடிவமான சிறிய இலைகள் கொடியில் வரிசையாக மாறி மாறி அமைந்துள்ளன. இலை, கொடி ஆகியவற்றில் மெல்லிய பஞ்சுபோன்ற சுணைகளுண்டு. சிறிய வட்டவடிவப் பூக்கள், நீலமேக நிறமுடையதாகவும், மிக மெல்லியதாகவும் இருக்கின்றன. இரண்டு கடுகளவுள்ள காயினுள் சுமார் 4.5 விதைகளுண்டு. இது ஓராண்டுப் பயி ராகும்.

**இனவிருத்தியும், பரம்பலும்**

யாழ் மாவட்டத்தில் சிறிது மணல்பாங்கான இடத்தில் அதிகமாகக் காணமுடியும். செம்மண், மணல் கலப்புள்ள எல்லா இடங்களிலும் விதைகளைத் தூவிப் பயிரிடலாம். பாத்திகளிலும் பயிரிட ஏற்றது. இதில் இரு வகை உண்டு. வெள்ளை நிறப்பூக்களைக் கொண்ட விஷ்ணுகிராந்தி மிகவும் அரிதாகவே பரம்பிக் காணப்படும்.

**மருத்துவப் பிரயோகம்**

"விடாத காய்ச்சலுக்கு விஷ்ணுகிராந்தி" என்பது பழமொழி

பொதுவாக எமது மருத்துவத்தில் வைரஸ் தொற்றுக்களால் வரும் காய்ச்சலுக்கு பயன்படும் முக்கிய மூலிகைச்சரக்குகளுள் விஷ்ணுகிராந்தி முக்கியமானது. இதன் முழுக் கொடியுடன், கருந்துளசி, நிலவேம்பு சேர்த்து குடிநீர்



தயாரித்து 30-60 மி.லீ அளவு காலை, மாலை எடுக்க சிறுநீர் நன்கு வெளிப்பட்டு, வியர்வையை பெருக்கி, சுரத்தை தணிக்கும். அத்துடன் உடலில் நோய்எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்.

✦ வேருடன் இக்கொடியை பிடுங்கி நன்றாக கழுவி சீரகம் சேர்த்தரைத்து பாலில் உட்கொள்ள நரம்புத்தளர்ச்சி நீங்கும்.

✦ சில கிராமத்து மக்கள் இன்றும் சிறுவர்கட்கு ஏற்படும் காய்ச்சலுக்கு கைமருந்தாக இதன் குடிநீரிட்டு கொடுப்பது வழக்கம்.

✦ அரைக் கைப்பிடியளவு விஷ்ணுகிராந்தியுடன் மூன்று வெள்ளைப்பூண்டு பற்கள், அரைத் தேக்கரண்டி அளவு சீரகம் சேர்த்து மைபோல அரைத்து தினமும் ஒரு வேளை 20 நாட்கள் கொடுத்து வர உடலில் வீரிய விருத்தி உண்டாகும்.

✦ சுத்தம் செய்த விஷ்ணுகிராந்தி இலைகள் ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வதக்கி ஒரு டம்ளர் அளவு தண்ணீர் விட்டு பாதியளவிற்கு சுண்டக் காய்ச்சிய குடிநீரை காலை, மாலை கொடுத்து வர வயிற்றுப் போக்கு நிற்கும்.

✦ இவ் முழக்கொடியுடன் துளசியும் சேர்த்துக் குடிநீரிட்டு கொடுத்துவர செரியாமை கழிச்சலோடு கூடிய காய்ச்சல் நீங்கும்.

✦ 50 கிராம் இலைகளை தானியமாவுடன் சேர்த்து அடை தயாரித்து புசித்து வரினும் உடல் வீரிய விருத்தியுண்டாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

✦ 20 கிராம் விஷ்ணுகிராந்தியை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு 500 மி.லி நீர்விட்டு கால் பங்கை சுண்டக் காய்ச்சி வடிகட்டி 30-60 மி.லி. தினமும் இருவேளை பெரியவர்கட்கு கொடுக்க இருமல், கசம் தீரும் . இதை பாலில் கலக்கி க் கொடுக்க கண்களுக்குப் பிரகாசம் கொடுக்கும்.







யாழ். உயர் பட்டப் படிப்புகள் கல்லூரியில் இடம்பெற்ற மனித உரிமை பாதுகாவலர் பயிற்சி நெறியின் போது மனித உரிமை அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும், மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: அலுவலகசெய்தியாளர்

# அமைச்சர்கள் பலர் விரைவில் ஐ.தே.கவுடன் இணைவார்கள்

## தயாசிறி ஜயசேகர எம்.பி.ஆருடம்

(கொழும்பு)

அமைச்சுக்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினரின் தலையீடுகள் அதிகரித்துள்ளமையால் பல அமைச்சர்கள் எதிர்வரும் நாட்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர்.

ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் நல்ல நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் இன்று சுதந்திரக்கட்சியின் சர்வாதிகார ஆட்சிக்காக பயன் படுத்தப்படுகின்றது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

நாட்டை பாதுகாப்போம் எனக் கூறிக் கொண்டவர்களே இன்று நாட்டைக் காட்டிக் கொடுத்து பொதுமக்களுக்கு துரோகம் செய்கின்றனர். நல்ல தலைவரை தேர்ந்தெடுக்க நாட்டு மக்கள் தவறி விட்டனர் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தயாசிறி ஜெயசேகரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் சூழ்ச்சியில் ஐக்கியதேசியக் கட்சி ஒருபோதும் அகப்படாது ஐ.தே.கவின் பிரச்சினைகளை ஜனநாயக முறையில் தீர்த்துக் கொள்ள முடியும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை ஐ.தே.கவின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினை அல்ல. ஜன நாயகத்திற்கு விரோதமாகச் செயற்படும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட் சிக்கு பிரச்சினையேயாகும். ரணில் விக்கிர மசிங்க ஒரு சிறந்த தலை வர் அவரது சேவை தற்போது நாட்டுக்குத் தேவையாகும் என்றார்.

இம் மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகையில் யுத்தத்தில் வெற்றி கொண்டாலும் பொருளாதார யுத்தத்தில் அரசாங்கம் படுதோல்வியை சந்தித் துள்ளது.

அரசாங்கத்தின் சகல விதமான இயலாமைகளையும் பிரபாகரனைக் காட்டியே மூடி மறைத்து விடுகின்றது. ஐ.தே.கவின் ஆட்சிக்காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரம் இன்று படு பாதாளத்தில் வீழ்ந்துள்ளது என்று இங்கு கருத்துத்தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஒரே நாளில் நடத்தவேண்டிய தேர்தல்களை இன்று பல நாட்களில் நடத்த கபட அரசியலில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இலங்கை வரலாற்றிலேயே இவ்வாறான மாகாண சபைத்தேர்தல்களை தனித்தனியாக நடத்தியமை இதுவே முதல் தடவையாகும். இதுவும் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டமேயாகும்.

தேசிய பொருளாதாரத்தை பாதுகாக்க அரசாங்கம் தவறியுள்ளது.

அரச நிறுவனங் களில் வழங்கப்படும் போனஸ், சம்பள உயர்வு, பதவி உயர்வு என்பவை இடை நிறுத் தப்பட்டுள்ளதுடன் புதிய வேலை வாய்ப்புகள் வழங்குவதும் நிறுத் தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வீழ்ச்சி வெகு தூரத்தில் இல்லை.

சந்திரிகா பண்டார நாயகவின் அரசாங்கத்தைப் போலவே தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் விளங்குகின்றது. எவ்விதமான கொள்கைகளோ புதிய திட்டங்களோ கிடையாது. பொதுமக்களின் எதிர்ப்புகள் மெதுவாக தலை தூக்கியுள்ளன. பொதுமக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தும் இந்த அரசாங்கம் வெகு விரைவில் கவிழும் என்றும் அவர் கூறினார். (ஓ-5)

## பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் விடுவிப்பு

கல்கிசை விசேட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பூபாலசிங்கம் புத்த கசாலையின் உரிமையாளரும் ,அவரது உதவியாளரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பூபாலசிங்கம் புத்தகசாலையில் உரிமையாளர் ஸ்ரீதரசிங் ,உதவியாளர் சுதர்சன் ஆகிய இருவருமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் கல்கிசை விசேட பொலிஸ் குழுவினரால் வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த 5ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அவ் இருவரும் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்தே விசாரிக்கப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் இ.தொ.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் மேற்கொண்ட முயற்சியின் காரணமாகவே இவ்விருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களது விடுதலைக்கு பிரதியமைச்சர் பெ.இராதாகிருஸ்ணரும் முயற்சி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## பிரித்தானிய எம்.பி.யின் கூற்று பெரும் நகைச்சுவை

### பாலித்த கோஹன தெரிவிப்பு

(கொழும்பு)

உடனடியாக போர்நிறுத்தம் அமுல் படுத்தப்படாவிட்டால் பொதுநலவாய நாடு களின் அங்கத்துவத்திலிருந்து இலங் கையை நீக்க வேண்டும் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் ரயான் தெரிவித்துள்ளமை பெரும் நகைச்சுவை யாகும். இதனைக் கேட்கும்போது சிரிப்புத் தான் வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித்த கோஹன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளினால் முன்வைக் கப்பட்டுள்ள யுத்த நிறுத்த கோரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் சாதகமான பதிலை வழங்காவிட்டால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டும் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் ரயான் தெரிவித்துள்ளமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் ரயான் தெரிவித்துள்ள கூற்றை செவிமடுக்கும் போது சிரிப்புத்தான் வருகின்றது.

இது மிகப்பெரிய நகைச்சுவையாகும். இதனைப்பற்றி வேறு எதனைத்தான் நாங்கள் கூறுவது? என்றும் பாலித்த கோஹன கேள்வியெழுப்பினார். (ஓ-5)

# நிஜத்தின் முகம்........ நிஜத்தின் முகம்........

### 'யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்'

## மேம்பாட்டின் மீதான சவால்கள்

இன்று பேசப்படும் மேம்பாடு எனும் விடயம் பல்வேறு திட்டங்களுக்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுப்பனவாக அமையும் விடயமாகும். சமூக மேம்பாடு என்பது வாழ்க்கைத்தர வளர்ச்சியாகவே கருதப்படுகின்றது. இந்த வகையில் "வாணர்" (Warner) என்ற அறிஞர் சமூகத்தில் மக்கள் வாழ்விற்காக வாய்ப்புக்களை அதிகரிப்பதே மேம்பாடு என்று கூறுகிறார். மேம்பாட்டின் இறுதி இலக்கு அனைத்து மக்களுக்குமான வாய்ப்புக்களை அதிகரிப்பதாகும். ஐ.நா. சபையும் மேம்பாட்டிற்கு வரைவிலக்கணம் கூறும் போது கல்வி உடல் நலம், சத்துணவு, வீட்டு வசதி, சமூக நலம் சார் வாய்ப்புக்களை விரிவாக்குதல் இவ்வாறான வசதி வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளாத கிராமங்கள் மேம்பாடு அடையாததற்கு தடையாக அமையும் காரணிகளை நோக்குதலே இக்கட்டுரை ஆகும்.

சமூக மேம்பாட்டிற்கு தடையாக அமையும் காரணிகளில் ஒன்றான வறுமையினால் போதைப் பொருள் பாவனை, விபச்சாரம், தற்கொலை, கொலை, களவு, முதியோர் தனிமை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றனவும் அத்துடன் சுகாதாரம் பற் றிய விழிப்புணர்வு அற்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அவ்வகையில் சுகாதார சீர்கேடுகளை அக் கிராமம் கொண்டுள்ளதால் வறுமையில் வாழ வேண்டிய நிலை ஏற்படுகின் றது. பல சமூகப் பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் வறுமை மூல காரணியாகி விடுவதை அவதானிக்கலாம். வறுமையானது குறைந்த வாழ்க்கைத் தரத்தினை கொண்டதாக அமைந்துள்ளது. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத் குடும்பங்களும் சௌகரியமான வாழ்க்கை முறையை எட்டாத நிலையிலும் காணப்படுகின்றனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வேலைக்கு அனுப்பு வதை பல கிராமங்களில் காணமுடிகிறது. சிறுவர் ஊழியத்தில் பெண்களும் ஆண்களும் அடங்குவர். இவர்கள் வறுமை காரணமாக 5ஆம், 6ஆம் வகுப்புகளுடன் பாடசாலையை விட்டு இடைவிலகி கூலி வேலைக்குச் செல்கிறார்கள்.

வறுமை வாழ்க்கையில் கல்வி முறையில், பொருளாதார அமைப்பில், பண்பாட்டு வடிவில் பல தாக்கங்களை ஏற்படுத்தி மேம்பாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தொழில் முறைமையானது நிரந்தர வருமானத்தினைப் பெற்றுத் தருவதாக அமையாமையும் மேம்பாட்டிற்கு தடையாக வுள்ளது. கிராமத் தில் உள்ளவர்கள் கல்வி அறிவினைப் பெற்றுக்கொள்ளாத தால் அரசாங்கத் தொழில் அற்றவர்களாகக்காணப் படுகின்றனர்.வருமான ஒழுங்கின்மை, பாரம் பரியத்தொழில் முறை மையை கைவிடாதவர்களாக கிராம மக்கள் காணப்படும் சம யத்தில் அச் சமூக மேம்பாடு அடைவது கடினமானது. வறுமையானது சமூக மேம்பாட்டிற்கு தடையாக அமைகிறது. வருமானச் சமமின்மை, வேலை இன்மை என்பன ஒரு நாட்டில் இருக் கும் வரை அந்த நாடு அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியாது. இம்மக்கள் வறுமை என்னும் நச்சு வட்டத்தில் சுழன்று கொள்கின்றனர். கிராமங்களில் வாழும் மக்களில் பல பேர் விவ சாயத்திற்கான சொந்த நிலம் இல்லாதுள்ளதுடன் குத்தகை நிலங்களில் நீர் வசதியின்மையும் காணப்படுகின்றது.

பாரிய குளங்கள் கைவிடப்பட்டுள்ளமையும் ஒழுங்கான புனருத்தாரணம் இன்மையும் மேம்பாடு அடைய முடியா துள்ளது. எமது சமூக மக்களின் வாழ்க்கை முறையானது பண்பாட்டு மயமாக்கத்திற்கு அமைவாக காணப்படுகின்றது. இதனால் அப் பண்பாட்டில் இருந்து மீள முடியாது காணப்படுகின்றார்கள். லூவிஸின் பண்பாட்டு வறுமை கோட்பாட்டிற்கு அமைவாக காணப்படுகின்றது. இம்மக்களின் மனங்களில் நாம் எல்லைப் படுத் தப்பட்டுள்ளோம். உதவியற்ற வர்கள் தங்கி வாழ்கிறோம் என்ற மனப்பான் மையை ஏற்படுத்தி வருகின்றது.



அக்கறையின்மை, சோம்பறித்தன்மை ,தம் தலைவிதி என்ற நம்பிக்கை காரணத்தினால் ஒதுங்கி வாழ்கின்றார்கள்.

கூலித்தொழிலை கையாள்வதும் அதனால் மனித சக்தி வீன்விரயம், சம்பளம் குறைவு அதனால் குறைந்த வரு மானம் ஏற்படுகிறது. இம்மக்கள் பாரம்பரிய தொழில் முறையை கைவிடாததற்கு காரணமாக அவர்களின் கல்வி அறிவின்மையே காரணமாகும்.கல்வி மட்டம் குறைவாக காணப்படுவதனால் அக முரண்பாடுகள் கிராமத்தில் உருவாகி பல அழிவுக ளுக்கு முகம் கொடுப்பதுடன் சமூக ஏற்றத்தாழ்வு உருவாகின்றது.

கல்வியின் அவசியத்தை உணராது பலர் அடிப்படைக் கல்வியையும் பெறாது வாழ்கிறார்கள். கிராம மட்டங்களில் வாழும் மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் அயற் கிராம பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். தமது கிராமத்தில் பாடசாலையின்மையும் வெளிக்கிராமப் பிள்ளைகளுடன் பழகுவதில் ஏற்படும் சிக்கல் ,பெற்றோர்கள் பிள்ளை மீது அக்கறையின்மை, பெற்றோரின் கல்வி அறிவின்மை, போசாக்கின்மை, வறுமை போன்ற காரணங்களால் மாணவர்கள் பாடசாலை விட்டு விலகுகின்றனர்.

இளைஞர்கள் மத்தியில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினாலும் பாடசாலை இடைவிலகல் அதிகமாகக் காணப்படுகின்றது. மேம்பாடடையாத கிராமங்களில் உயர் படிப்பு படித்த மாணவர்கள் உள்ளார்களா? என்றால் மிக அரிது எனலாம். எமது பண்பாட்டில் உள்ள சாதி சமூக அடுக்கமைவும் சமூக மேம்பாட்டிற்கு தடையாக அமைந்த காரணியில் ஒன்றாகும். சமூகமானது ஏதோ ஒரு வகையில் அடுக்கமைவுக்கு உட்பட்டே காணப்படுகின்றது. சமூக அடுக்கமைவு என்பது சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகின்றது. இந்த வகையில் சமூகங்கள் வர்க்கம் , இனம், மத மொழி பிரதேசம் அதிகாரம், சாதி என்பவற்றைக்கொண்டு பாகுபடுத் தப்பட்டிருப்பதைக் காணலாம்.

எமது சமூகமானது சாதியை அடிப்படையாகக்கொண்டு அடுக்கமைவுக்கு உட்பட்டிருப்பதைக்காணலாம் சாதிக்கட்ட -மைப்பு இறுக்கமாகக் காணப்படுவதால் மேல் நோக்கிய அசைவு நெகிழ்ச்சியற்று காணப்படுகின்றது. வெளித்தொடர்பு அற்று பண்பாட்டில் இறுக்கமாக பிணைந்து காணப்படுதலும் மேம்பாடு அடைவதற்கு சவலாக அமைவனவாகும். சமூகம் மேம்பாடடையாதற்கு இன்னொரு காரணம் குடும்ப அமைப் பும் திருமண முறை என்பனவும் காரணமாக அமைகின்றது. சில கிராமங்களில் குடும்பங்கள் யாவும் அங்கு அகமண முறையில் திருமணம் செய்து கொள்கின்றனர். தமது கிராமங் களுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளும் முறையைப் பார்க்கும் போது காதல், ஓடிப்போதல் முறைதான் காணப்படுகிறது திருமண வயதும் குறைவாக காணப்படுவதுடன் அதிகளவான பெண்குழந்தைகளை பெற்றெடுத்தல், அக் குழந்தைகள் சிறுவயதிலேயே தாயின் நடிபங்கை ஏற்று ஆரம்பிக்கின்றது. இவ்வாறான தன்மைக்குள் மீளவும் வாழ நிர்ப்பந்திக்கப்படுவதால் எதுவித முன்னேற்றத்தையும் எட்ட முடிவதில்லை.

மேலும் யுத்தத்தினால் ஏற்பட்ட வடுவினால் தோற்று விக்கப்பட்ட அங்கவீனர்கள், அநாதைகள் விதவைகள் , மனநோயாளிகள் போன்ற பல் வேறு குழுவினரை உருவாக்கி சொத்திழப்புகளுடன் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்டு வாழ்தல் தொடர்ச்சியான வறுமைக்கு இட்டுச்செல்கின்றது.

மேம்பாட்டிற்கு தடையாக மதுவும் காரணமாக உள் ளது. கூலி வேலையால் கிடைக்கும் பணம் முழுவதையும் குடிக்குச் செலவழிப்பது மட்டுமன்றி வீட்டுப் பொருட்களை விற்றும் ,நிவாரணப் பொருட்களை விற்றும் செயற்படுகின்றனர். அத்துடன் மனைவி, பிள்ளைகளை துன்புறுத்தி வருவதுடன் அவர்களின் மேம்பாட்டிலும் காலதாமதத்தினை ஏற்படுத்தி வருவதனை அவதானிக்க முடிகிறது.

மேம்பாடு அடையாத கிராமங்களினை அவதானிக்கும் போது பாடசாலைகளில், வைத்தியசாலைகள் என்பன மிகவும் அரிதாகவும் பொது நிறுவனங்கள், நூல் நிலையம், பல நோக்குச் சங்கம், சமுத்தி நிலையம் போன்றன குறைவாக காணப்படுவதுடன் சேய்மையிலும் அமைந்திருப்பதும் அம்மக்களின் வாழ்க்கைத்தரம் கீழ் நிலையில் இருப்பதற்கு காரணமாகும். தொகுத்து நோக்கு மிடத்து மேம்பாட்டின் மீது சவாலாக அமையும் எழுத்தறிவின்மை, போசாக்கின்மை, இடைவிலகல், வேலையின்மை, வறுமை .... போன்ற வற்றை குறைவடையச்செய்வதன் ஊடாகவும் அரசு ,அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை துரிதமாக்குவதன் ஊடாகவும் மேம் பாட்டை அடைய முடியும். சமூகப் பொருளாதார பண்பாட்டு உரு மாற்றங்கள் மூலம் பின் தங்கிய கிராமங்களை மேம்பாடடையச் செய்தல் அவசியமாகும்.

இ.நாதரூபினி
சமூகவியற் துறை

மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்

தலைக்குமேல் பறவை பறப்பதை உன்னால் தடுக்க முடியாது; ஆனால், அது உன் தலையில் கூடு கட்டுவதைத் தடுக்க முடியும்.

- அமெரிக்கா

வலம்புரி

## கூட்டமைப்பை அழைத்த ஜனாதிபதி யுத்தத்தை நிறுத்த முன்வருவாரா?

வன்னியில் நாளாந்தம் மக்கள் பலியாகிய வண்ணம் உள்ளனர். இந்த நிட்டூரத்தைத் தடுக்கவும், தட்டிக் கேட்கவும் யாருமே இல்லையா என்ற வினாவைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்ற நிலை தமிழருக்குரியதாகியுள்ளது.

நேற்று முன்தினம் 102 பேர் வன்னியில் கொல்லப்பட்டுள்ளனர். நாளாந்தம் இந்த எண்ணிக்கை தொடர்கிறது.

யுத்த நிறுத்தம் செய்து மக்களைக் காப்பாற்றுவோம் என்ற முடிபை எடுக்கவேண்டிய அரசு அதுபற்றிக் கவலை கொள்ளாமல் நடந்து கொள்கிறது.

ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுத்த தமிழகம் தேர்தல் சூறாவளியில் சிக்குண்டு சிதறிச் சின்னாபின்னமாகி கட்சி மாறி நிற்கின்றது.

அட! இவர்களா இப்படி என்று கேட்கும் அளவுக்கு கட்சிக் கூட்டணிகள் நடந்தேறியுள்ளன.

எனவே தேர்தல் நடந்து முடியும்வரை இலங்கைத் தமிழர் விவகாரம் அரசியல் இலாபத்துக்குரியதாக இருக்குமேயன்றி,வன்னியில் தினந்தோறும் இறந்துபோகும் அவலத்தை நிறுத்தாதென்பது உறுதியாகிவிட்டது.

இதனிடையே இனப்பிரச்சினைக்கு தீர்வு குறித்து ஆராய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்துள்ளார்.

வன்னியில் மனிதப் பேரவலம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்ட மக்கள் இதுவே நிலைமையாக இருக்கும்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஜனாதிபதி அழைத்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லுமா? இல்லையா? என்பது வேறுவிடயம்.

இங்கு முக்கியமான விடயமொன்று உள்ளது. அதாவது வன்னியில் தினந்தோறும் உயிரிழந்து கொண்டிருக்கும் மக்களுக்கு உயிர்ப் பாதுகாப்பை வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதே அந்த விடயமாகும்.

மக்களை அவலத்திற்குட்படுத்திக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு பற்றி பேசுவது பொருத்தமற்றதாகும்.

அதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அழைத்துள்ள ஜனாதிபதியை கூட்டமைப்பு சந்திக்கும் என எடுகோள் எடுத்துக் கொண்டால், கூட்டமைப்பின் முதலாவது கேள்வி யுத்தத்தை நிறுத்தி வன்னியிலுள்ள அப்பாவி மக்களைக் காப்பாற்றுங்கள் என்பதாக இருக்கும்.

அப்படியானதொரு விடயத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா? என்பதே இங்குள்ள முக்கிய விடயமாகும்.

யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த ஜனாதிபதி சம்மதம் தெரிவிக்காவிடின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய ஆய்வுகள் எதுவுமே பயனற்றவையாகிவிடும்.

## யாழ்.ரயில் சேவை கருத்திட்டத்துக்கு ஜனாதிபதியின் ஒருமாத சம்பளம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் கருத்திட்டத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஒரு மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்கினார்.

மேற்படி கருத்திட்டத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் வைபவம் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி தமது ஏப்ரல் மாதத்திற்கான சம்பளத்தை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கையளித்தார்.

அதனையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் ஜனாதிபதி செயலக ஊழியர்களும் தமது ஒரு நாள் சம்பளத்தை மேற்படி திட்டத்திற்காக வழங்கினார்.

பிரபல தொழிலதிபர்கள், ரவீந்ர ரந்தெனிய, மாலினி பொன்சேகா போன்ற திரைப்பட கலைஞர்களும் தமது அன்பளிப்புக்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர். இதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கிற்கும் தெற்குக்குமான உறவுப்பாலமாக திகழும் இக்கருத்திட்டத்திற்குச் சகலரும் மனமுவர்ந்து தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். (ஓ-5)

## யாழ்ப்பாண வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வைத்தியசாலையில் குறைபாடு நிலவி வந்த எக்ஸ்றே கதிர் இயக்க தொழிற்பாடுகளை வழமைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் பொருட்டு கொழும்பில் இருந்து எக்ஸ்றே படப்பிடிப்பு சுருள்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்லப் பட்டுள்ளன.

யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையில் இருந்த எக்ஸ்றே கருவிக்கான படச் சுருள்கள் கிடைக்காமை காரணமாக வெளிச்சந்தையில் இருந்தே எக்ஸ்ரே படச் சுருள்கள் தருவிக்கப்பட்டதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி பேசலேசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையின் பிராணவாயு உற்பத்தியாக்கிக்கான உதிரிப்பாகங்கள் இல்லாமை காரணமாக கொழும்பில் இருந்து பிராணவாயு கொள்கலன்கள் எடுத்துவரப்பட்டு சிகிச்சைகள் இடம்பெற்றன.

இந்நிலையில் குறித்த பிராண வாயு உற்பத்தியாக்கிக்கான உதிரிப்பாகங்கள் விரைவில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படவுள்ளதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

## வடக்குக் கிழக்கில் மின்வலு வலைப்பின்னலை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் மின்வலு விநியோக வலைப்பின்னலை புனரமைப்பதன் மூலம் பல அனுகூலங்கள் கிடைக்குமென மின்வலு எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த புனரமைப்பு பணிகளினூடாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் கைத்தொழில் துறை வளர்ச்சி காணும் அதனூடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு கிடைக்கும் என அமைச்சர் டபிள்யூ டி.ஜெ. செனவிரட்ண நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த கால பயங்கரவாத செயற்பாடுகளால் சீர் குலைந்த மின்விநியோக வலைப் பின்னல் விரைவில் புனரமைக்கப்படும் இதற்கான செலவுகளுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கவுள்ளன.

குறிப்பாக சீராக மின்விநியோகத்தை மேற்கொள்வது பற்றி கவனம் செலுத்தப்படும் என அமைச்சர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் விவசாயத்துறை துரித வளர்ச்சி கண்டு உள்ளதனால் அங்கு மின்வலு தேவைகள் அதிகரித்துள்ளன.

பயங்கரவாத பிடியில் இருந்த பகுதிகளில் இயல்பு நிலை திரும்பியிருப்பதால் பிரதேச வாசிகள் கைத்தொழில் முயற்சிகளில் கூடுதல் ஆர்வம் காட்டுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன் -கருணாநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

கச்சதீவு விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்கப்போவதில்லை என தமிழக மாநில முதல்வர் கலைஞர் கருணாநிதி அறைகூவல் விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஒரு தலை பட்சமாக கச்சைதீவை புனிதப்பிரதேசமாக அறிவித்து செயற்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜெயலலிதா ஜெயராம் அண்மையில் தமிழக அரசு மீது சுமத் தியிருந்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை குறிப் பிட்டுள்ளார்.

கச்சைதீவை புனிதப் பிரதேச மாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப் படும் என இலங்கையின் நகர அபி விருத்தி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் வாய் தவறி இதனைத் தெரிவித்திருக்கலாம் எனவும் அந்தக் கூற்று உண்மையானதென்றால் அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

## மனை முகாமைத்துவ பயிற்சி வகுப்புகள்

(வடமராட்சி)

வடமராட்சி சக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் படித்து வெளியேறிய மாணவிகளுக்கான மனை முகாமைத்துவ பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

உடை அலங்காரம், மேக்கப், கேக் ஐசிங் தயாரிப்பு, தையல், தலை அலங்கரிப்பு போன்ற துறைகள் சம்பந் தமான பாடங்கள் நடைபெற்று வருகின்றன. 8 மாத காலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்புக்கள் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் அல்வாய் வடக்கு றோமன் தமிழ்க் கலவன் பாடசாலை முகாமைத்துவக் குழு கல்வி ஆலோசகர் பத்திநாதனின் வழிகாட்டலிலும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவின் ஒத்தாசையுடனும் நடைபெற்று வருகின்றன. (ஓ-10)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு பலம்



இவ்வுலகிலோ அல்லது மறு உலகிலோ இழிவுக்கும் பாவத்திற்கும் உறுதியான காரணம் அச்சமே என்பது உண்மை. அச்சமே துயரத்தைத் தருவது. அச்சமே மரணத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அதை உண்டு பண்ணுவது எது? நமது உண்மை இயல்பை அறியாமையே நம்மில் ஒவ்வொருவரும் மன்னருக்கெல்லாம் மன்னரான இறைவனின் வாரிசுகள்.

அனைத்துப் பாவங்களையும் அனைத்து தீமைகளையும் பலவீனம் என்ற ஒரு வார்த்தைக்குள் அடக்கி விடலாம். தீய செயல்கள் அனைத்திற்கும் இயக்கும் சக்தியாயிருப்பது பலவீனமே தன்னலம் முழுதிற்கும் மூலமாயிருப்பது பலவீனமே மனிதரைப் பிறருக்குத் தீங்கிழைக்கச் செய்வதும் பலவீனமே.... தாங்கள் உண்மையில் எதுவாக இல்லையோ அதை வெளிப்படுத்தும்படி மக்களைச் செய்வதும் பலவீனமே.

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அமெரிக்க ஒத்துழைப்பு தேவை

## அதிபர் சர்தாரி தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)

பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்க, பிரிட்டனின் உதவி தேவை என பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி கூறியுள்ளார். பாகிஸ்தானில் பழங்குடிகள் வசிக்கும் பகுதியில் தலிபான்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

தலிபான்களை ஒடுக்க நினைப்பதால் பாகிஸ்தானின் பல பகுதிகளில் பயங்கரவாதிகள் தற்கொலை படைத் தாக்குதலை நடத்துகின்றனர். இதற்கிடையே முன்னாள் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரியை மீண்டும் பதவியில் அமர்த்தக்கோரி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப் போராட்டம் நடத்தினார். இதனால் சர்தாரி அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இந்த நெருக்கடியை சமாளிக்க தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரியை மீண்டும் பதவியில் அமர்த்த ஒப்புக் கொண்டார்.

இஸ்லாமாபாத்தில் நடந்த பாகிஸ்தான் தின விழாவில் கலந்து கொண்ட ஆசிப் அலி சர்தாரி பேசுகையில், ''முஷாராப்பின் எட்டு ஆண்டு கால ஆட்சியில் ஜனநாயகம் முடக்கப்பட்டது. நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தியதன் மூலம் ஜனநாயக சக்கரம் மீண்டும் சுழல ஆரம்பித்துள்ளது.

எதிர்க்கட்சியினரும் ஆளும் கட்சியுடன் உடன்பட்டு செயலாற்ற வேண்டும். பாகிஸ்தானின் சில பகுதிகளில் தலிபான்களின் கை ஓங்கியுள்ளது. பயங்கரவாதிகளுடனான சண்டை உள்ளூர் சண்டையாக இருந்தாலும் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளின் ஒத்துழைப்புடன் தான் அதை வெற்றி கொள்ள முடியும். எனவே பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்த நாடுகள் உதவவேண்டும் என்றார். (ஓ-5)

# மனிதக் குண்டு தாக்குதலில் 25 பேர் பலி

(ஈராக்)

ஈராக்கில் குர்தீஸ் முஸ்லிம்களுக்கும், சன்னி முஸ்லிம்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் நடந்து வருகிறது. ஒருவர் மீது ஒருவர் வெடிகுண்டு தாக்குதலை நடத்தி வருகின்றனர். ஜலவா என்ற இடத்தில் குர்தீஸ் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்து விட்டார்.

இதற்கான இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஏராளமானோர் கூடி இருந்தனர். அப்போது உடலில் வெடி குண்டை கட்டி வந்த தீவிரவாதி ஒருவன் கூட்டத்துக்குள் புகுந்து வெடிக்க செய்தான். இதில் 25 பேர் உடல் சிதறி பலியானார்கள். 50 பேர் காயம் அடைந்தனர். மனித குண்டாக வந்தவன் சன்னி முஸ்லிம் தீவிரவாதியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஓ-5)

# நேபாள முன்னாள் மன்னருக்கு பேரனுக்கு முடிசூட்டும் ஆசை?

(காத்மண்டு)

தனது பேரனுக்கு நேபாள நாட்டு மன்னனாக முடி சூட்ட வேண்டுமென அந்நாட்டு முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷா இந்திய தலைவர்களுடன் நடந்த சந்திப்பின் போது கேட்டுக் கொண்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

தனது உறவினரின் திருமண விழாவில் கலந்து கொள்வதற்காக ம.பி., சென்ற ஞானேந்திர ஷா கடந்த ஞாயிறன்று பா.ஜ., மூத்த தலைவர் எல். கே. அத்வானியைச் சந்தித்துப் பேசினார். ''இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமான சந்திப்புத் தான், அரசியல் ரீதியானது அல்ல' என ''இமாலயன் டைம்ஸ்' பத்திரிகையில் ஷா கூறியதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன், மாவோயிஸ்ட் தலைவரும், நிதியமைச்சருமான பாபுராம் பட்டாரை கூறுகையில், ''நேபாளத்தில், ஆட்சியை மீண்டும் கைப்பற்ற முன்னாள் மன்னர் ஷா முயற்சி செய்து வருகிறார். தனது பேரனை அரியணையில் அமர்த்த வேண்டும் என்ற அவரது கனவு பலிக்காது' என்றார்.



காங்கிரஸ் தலைவர் சோனியா, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, ம.பி., முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் ஆகியோரை, ஞானேந்திர ஷா ஏற்கனவே சந்தித்துப் பேசியுள்ளார். ''எங்களுக்கு எதிரான கூட்டணி, நேபாள நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற திட்டமிட்டுள்ளன' என நேபாள காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவின் இந்திய பயணத்தை ஞானேந்திராவின் ஆட்சியைக் கைப்பற்றும் திட்டத்துடன் தொடர்புபடுத்தி, மாவோயிஸ்ட்கள் செய்தி வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த கிரிஜா பிரசாத் கொய்ராலா கூறுகையில், ''நான் மருத்துவ பரிசோதனைக்காகத் தான் டில்லி வந்துள்ளேன் ; அரசியல் நோக்கத்திற்காக அல்ல. எனது டில்லி பயணத்தின் போது சில தலைவர்களைச் சந்தித்தேன்" என்றார். நேபாளத்தில் கடந்தாண்டு அரசாட்சி முறை ஒழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

# இரட்டைக் குழந்தையை பிரசவிக்கும் உலகின் முதலாவது ஆண்மகன்

(ஸ்பெயின்)

உலகிலேயே இரட்டைக் குழந்தைகளைப் பிரசவிக்கும் முதலாவது ஆண் என்ற பெருமையை ஸ்பெயினைச் சேர்ந்த ரூபென் நோகொரோனாடோ. பெறவுள்ளார்.

பெண்ணாகப் பிறந்து பால் மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் ஆணாக மாறியுள்ள ரூபென் (25 வயது), இரட்டை சிசுக்களை கருத்தரித்துள்ளதாகவும் எதிர்வரும் செப்டம்பர் மாத இறுதியில் குழந்தைகளைப் பிரசவிக்கவுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பால் மாற்று சிகிச்சையின் போது தனது பெண் இனவிருத்தி உறுப்புகளை ரூபென் அகற்றாமை காரணமாகவே அவரால் கருத்தரிப்பது சாத்தியமானது எனக் கூறப்படுகிறது.

முன்னைய காதல் தொடர்பொன்றின் மூலம் இரு குழந்தைகளுக்கு தாயான ரூபெனின் காதலிக்கு மேலும் குழந்தைகளைப் பெறுவது சாத்தியமில்லை என மருத்துவர்கள் கூறியதையடுத்தே, ரூபென் தானே கர்ப்பந்தரித்து குழந்தைகளைப் பிரசவிக்க திட்டமிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பால் மாற்று சிகிச்சைக்குட்பட்ட ஒருவர் கருத்தரிப்பது ஸ்பெயினில் இதுவே முதல் தடவையாகும். அதேசமயம் அத்தகைய ஒருவர் இரட்டைச் சிசுக்களை கருத்தரிப்பது உலகில் இதுவே முதல் தடவையாகும்.

பால் மாற்று சிகிச்சையை மேற்கொண்ட அமெரிக்கரான தோமஸ் பீற்றி (35 வயது), கடந்த வருடம் ஜூன் மாதம் பெண் குழந்தையொன்றைப் பிரசவித்தார்.

அதே சமயம் அவர் விரைவில் தனது இரண்டாவது குழந்தையையும் பிரசவிக்கவுள்ளார். (ஓ-5)

# பூனையைத் தீ மூட்டி கொன்ற இளைஞர்களுக்கு 25 வருட சிறை

(வோஷிங்டன்)

பூனையொன்றை சித்திரவதை செய்து தீ வைத்து கொன்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்களுக்கு 25 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படவுள்ளதாக அமெரிக்க கிங்ஸ் கன்றி மாவட்ட சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

அஞ்ஜெலோ மென்டெரோய் (18 வயது), மத்யூ கூப்பர் (17 வயது) ஆகிய இரு இளைஞர்களும் எவருமற்ற வீடொன்றில் நுழைந்து, அங்கிருந்த பூனையின் மீது எரிபொருளை ஊற்றி தீ வைத்து விட்டு சென்றுள்ளனர்.

வலியால் துடித்த பூனை வீடு முழுவதும் ஓடியதில், வீடும் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்நிலையில் மிகவும் கொடூரமான முறையில் மிருகவதையில் ஈடுபட்டமை, கொள்ளையிட முயற்சி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் மேற்படி இளைஞர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் 25 வருட சிறைத் தண்டனையை அவர்கள் எதிர்கொள்ள நேரிடும் எனவும் சட்டத்தரணியான சாள்ஸ் ஜெ. ஹைன்ஸ் 'பொக்ஸ் நியூஸ்' செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். (ஓ-5)

# அமெரிக்காவில் விமான விபத்தில் சிறுவர்கள் உட்பட 17 பேர் பலி

அமெரிக்காவின் மேற்கு மாகாணமான மொன்டானாவில் சிறிய ரக விமானமொன்று விபத்துக்குள்ளானதில், சிறுவர்கள் உட்பட 17 பேர் பலியானார்கள்.



விமானத்தில் சென்ற எவரும் உயிர்தப்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒற்றை இயந்திரத்தைக் கொண்ட இந்த விமானமானது ஞாயிற்றுக் கிழமை மாலை கலிபோர்னியாவிலுள்ள ஓரோவில் நகரிலிருந்து போஸ்மன் நகருக்குப் புறப்பட்டது.

எனினும், இந்த விமானம் போஸ்மன் நகருக்கான தனது பயணப் பாதையை மாற்றி பட் நகரக்கு சென்றதாகவும் அந்நகரிலுள்ள போட் மூனி விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு 150 மீற்றர் தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானம் ஹோலி குரொஸ் கல்லறைப் பகுதியில் விழுந்து தீப்பிடித்து எரிந்துள்ளது.

விமானம் பாரிய சத்தத்துடன் கல்லறை வளாகத்திலுள்ள மரங்கள் மீது விழுந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் தரையிலிருந்த எவரும் காயமடையவில்லை. மேற்படி 'பிளேடஸ் பிசி - 12' ரக விமானமானது 2001 ஆம் ஆண்டு சுவிட்ஸர்லாந்தில் தயாரிக்கப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானம் சுற்றுலாவுக்கு சிறுவர்களை அழைத்துச் சென்ற வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ஓ-5)

## உலக தரிசனம்

# எழுத்து வடிவில் செய்தி அனுப்பும் தாவரங்கள்

## இஸ்ரேலிய விஞ்ஞானிகளின் சாதனை

தாவரங்கள் தமக்கு நீர் போதவில்லை என எழுத்து மூல செய்தியொன்றின் மூலம் மனிதர்களைக் கோரினால் எப்படியிருக்கும்?


இந்த கற்பனைக்கு செயல் வடிவம் கொடுத்துள்ளனர் இஸ்ரேலிய விஞ்ஞானிகள்.

இந்த விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட நவீன உணர் கருவியானது தாவரம் போதிய நீர் இன்றி வாடுவதை துல்லியமாக கணக்கிட்டு, அது தொடர்பான சமிக்ஞைகளை தாவரத்தை பராமரிப்பவரின் கையடக்க தொலைபேசிக்கோ அன்றி கணனிக்கோ எச்சரிக்கை ஒலியுடன் அனுப்பி வைக்கும்.

இந்த உணர்வு கருவிகள், தாவரங்களுக்கு தேவைக்கு அதிகமான நீர் வழங்கப்படுவதை தவிர்க்கவும் உதவிகின்றன.

மேற்படி உணர்கருவிகளைப் பயன்படுத்துவதால் பயிர்ச் செய்கைக்கான நீர்ப்பாசனத்தை பயனுறுதிப்பாடுள்ள வகையில் முகாமை செய்து, அதனூடாக 50 சதவீதத்துக்கும் அதிகமான நீரைச் சேமிக்க முடியும் என இந்த உணர் கருவியை உருவாக்கிய விஞ்ஞானிகளான கலாநிதி எரான் ராவெக் மற்றும் கலாநிதி அறி நட்லர் ஆகியோர் தெரிவித்தனர்.

அவர்கள் 7 வருட கால தீவிர ஆராய்ச்



சியின் பின்னரே இந்த உணர் கருவிகளை உருவாக்கியுள்ளனர்.

இந்த உணர் கருவியானது 'வோக்கி டோக்கி' உபகரண தொழில்நுட்ப அடிப்படையில் செயற்படுவதாகவும் தாவரத்தின் தண்டுக்குள் செலுத்தப்பட்ட உலோக நுண்கருவிகள் மூலம் இந்த உணர் கருவிகள் தாவரத்திற்குத் தேவையான நீரை மதிப்பிடுவதாகவும் மேற்படி விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

250 அமெரிக்க டொலர் செலவில் 5 ஆயிரம் ஓர்கிட் தாவரங்களுக்கு இந்த உணர்கருவிகளை பொருத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

# ஐ.பி.எல். இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறும்

## ஏப்ரல் 17ஆம் திகதி ஆரம்பம்

(மும்பை)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) இரண்டாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறுமென அந்த அமைப்பின் தலைவர் லலித் மோடி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தென்னாபிரிக்காவிற்கு சென்று அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஐ.பி.எல். தொடர் நடத்துவது தொடர்பில் ஆராய்ந்த பின்னரே இந்த தகவலை அவர் வெளியிட்டார்.

எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி இந்தியாவில் பிரதான மாநிலங்களில் ஆரம்பமாகவிருந்த ஐ.பி.எல். இருபது-20 தொடர் இந்திய நாடாளுமன்ற தேர்தல் நடை பெறவுள்ளமையால் போட்டிகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியாதென மத்திய,மாநில அரசுகள் அறிவித்ததையடுத்து வெளிநாடு ஒன்றில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஐ.பி.எல்.தொடரை நடத்த விருப்பம் தெரிவித்தன.

இந் நிலையில் ஐ.பி.எல்.தொடரை நடத்துவது தொடர்பில் தென்னாபிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஆராய்ந்தார்.

இதன் முடிபில் 2ஆவது ஐ.பி.எல். இருபது-20 தொடர் தென்னா பிரிக்காவில் நடத்துவது உறுதியானது.

மேலும் ஏப்பிரல் 10 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த தொடர் ஏப் பிரல் 17ஆம் திகதியாக மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் போட்டிகளை நடத்த 6மைதானங் களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன,

## நியூஸிலாந்து அணி அறிவிப்பு

(வெலிங்டன்)

இந்தியாவுடனான இரண்டா வது டெஸ்ட் போட்டிக்கான நியூசிலா ந்து அணியில் காயத்தினால் அவதிப் பட்டுவரும் டானியல் பிளைன், இயன் ஓபிறின் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.


எனினும் முதல் டெஸ்டுக்கான அணியில் புதுமுக வீரராக இணைக்கப்பட்டிருந்த பிரென்ட் ஆர்னல் இரண்டாவது டெஸ்டுக்கான அணியில் இருந்த நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய-நியூசிலாந்து அணிக ளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் நேபியரில் ஆரம்பமாகவுள்ளது.

**அணி விபரம்**

டானியல் விக்டோரி (தலைவர்), டானியல் பிளைன், ஜேம்ஸ் பிராங்க் ளின், மார்டீன் குப்டில், டிம் மன் போஷ், பிரெண்டன் மக்கலம், கிறிஸ் மார்டீன், கைல் மில்ஸ், இயன் ஓபிறின், ஜீதன் பட்டேல், ஜெஸ் ரைடர், றொஸ் ரெய்லர்.

## அமெரிக்க டென்னிஸ் தொடர்; நடால்,ஸ்வோனரேவா சம்பியன்



(இன்டியன்வேல்ஸ்)

அமெரிக்காவின் இன்டியன் வேல்ஸில் நடந்த சர்வதேச டென்னிஸ் தொடரில் நடால், ஸ்வோனரேவா ஆகியோர் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்கள்.

**நடால் வெற்றி**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள இன்டியன்வெல்ஸ் நகரில் பி.என்.பி. பரிபாஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்தது.

இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் நம்பர்-1 வீரர் ஸ்பெயினின் ரபெல் நடாலும் 4ஆம் நிலை வீரர் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவும் சந்தித்தனர். அரை இறுதியில் பெடரரை வீழ்த்தியதால் முர்ரே நம்பிக்கையுடன் நடாலை எதிர்கொண்டார்.

ஆனால் நடாலின் அதிரடியான ஷொட்களுக்கு முன்னால் முர்ரேயின் ஆட்டம் எடுபடவில்லை.

சுழன்றடித்த பயங்கரமான காற்றுக்கு மத்தியிலும் நடால் திறமையாக செயல்பட்டு வெற்றிக்கனியை பறித்தார். முடிபில் 6:1,6:2 என்ற நேர் செட் கணக்கில் நடால் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கடந்த 3 ஆண்டுகளில் அவர் வென்ற 2ஆவது இன்டியன் வேல்ஸ் பட்டமாகும். வெற்றிக்கு பின்னர் நடால் கூறுகையில்; பலத்த காற்று வீசிய சூழலின் கீழ் விளையாடியது உண்மையிலேயே சிரமமாக இருந்தது. ஆனால் நான் சிறப்பாக யுக்திகளை வகுத்து அதன்படி ஆடினேன். இது போன்ற கடினமான சூழ்நிலையில் உண்மையிலேயே நல்லதொரு ஆட்டத்தை விளையாடி இருக்கிறேன் என்றார்.

**ஸ்வோனரேவா அபாரம்**

பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ரஷியாவின் வீராங்கனை ஸ்வோனரேவாவும் நடப்பு சம்பியன் செர்பியாவின் இவானோவிச்சும் பலப்பரீட்சை நடத்தினார்கள்.

இங்கும் காற்றின் தாக்கம் அதிகமாக இருந்தது. பரபரப்பாக நடந்த இந்த மோதலில் ஸ்வோனரேவா 7:6 (7:5), 6:2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றினார்.

ஸ்வோனரேவா இதுவரை 9 பட்டங்கள் வென்றிருந்தாலும் அவரது வாழ்க்கையில் மிகப் பெரிய சம்பியன் பட்டமாக இது அமைந்துள்ளது. நான் சின்ன வயதில் இந்த போட்டியை டிவியில் பார்த்து இருக்கிறேன். இப்போது அதே போட்டியில் சம்பியன் ஆகியிருப்பது வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது என்று ஸ்வோனரேவா மகிழ்ச்சி ததும்ப குறிப்பிட்டார்.

## ஐ.சி.சி. பெண்கள் கிரிக்கெட் உலக லெவின் அணி அறிவிப்பு

(சிட்னி)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் பெண்களுக்கான ஒன்பதாவது உலக கோப்பை கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடந்தது. இதில் இங்கிலாந்து அணி சம்பியன் பட்டம் வென்று அசத்தியது .

இதனையடுத்து 2009 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. பெண்கள் உலகலெவின் அணியை முன்னாள் அவுஸ்திரேலிய கப்டன் பெலின்டா கிளார்க் தேர்வு செய்தார்.

இதில் சம்பியன் பட்டம் வென்ற இங்கிலாந்து அணியில் 5 வீராங்கனைகளும் 2ஆவது மற்றும் 3 ஆவது இடம் பிடித்த நியூசிலாந்து, இந்திய அணியிலிருந்து தலா 3 வீராங்கனைகளும் 4 ஆவது இடம் பிடித்த அவுஸ்திரேலிய அணியிலிருந்து ஒரு வீராங்கனையும் இடம் பெற் றுள்ளனர்.

இந்த உலக லெவின் அணிக்கு இங்கிலாந்தின் சார்லோட்டி எட்வோர்ட்ஸ் அணித் தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியா சார்பில் முன்னாள் அணித்தலைவி மிதாலி ராஜ், அமிதா சர்மா, பிரியங்கா ராய் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இங்கிலாந்தின் சராக் டெய்லர் விக்கெட் காப்பாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

12பேர் கொண்ட ஐ.சி.சி. பெண்கள் உலக லெவன் அணி வீராங்கனைகள்,

சார்லோட்டி எட்வோர்ட்ஸ் (அணித் தலைவி-இங்கிலாந்து), சராக் ரெய்லர் (விக்கெட் காப்பாளர்-இங்கிலாந்து), கிளாரி ரெய்லர் (இங்கிலாந்து), கதரின் புரூண்ட் (இங்கிலாந்து), லவுரா மார்ஷ் (இங்கிலாந்து),

மிதாலி ராஜ் (இந்தியா), அமிதா சர்மா (இந்தியா), பிரியங்கா ராய் (இந்தியா), ஷெல்லி நிட்செக் (ஆஸி.), சுசீ பேட்ஸ் (நியூசிலாந்து), கடே புல்போர்ட் (நியூசிலாந்து), சோபி டேவின் (12ஆவது வீராங்கனை (நியூசிலாந்து).

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...



43

சார்ஜா, சிங்கர் சம்பியன்ஸ் தொடர் இறுதிப்போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணியுடன் மோதியது இலங்கை அணி.

1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியதீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 273 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் துடுப்பெடுத்தாட களமிறங்கிய போதும் ஒரு பந்து கூட எதிர்கொள்ள முடியாமல் அணி ஆட்டமிழக்க ஏமாற்றத்துடன் அரங்கு திரும்பினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி முரளிதரனின் துல்லியமான சுழலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதன் மூலம் இலங்கை அணி சார்ஜா சிங்கர் சம்பியன்ஸ் தொடரில் சம்பியனானது. இதில் முரளிதரன் 10ஓவர்கள் பந்து வீசி 31ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் காம்பில் (38), கார்ப்பர் (31), கம்மின்ஸ் (0)ஆகியோரை ஆட்டமிழப்புச் செய்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார்.

**களத்தடுப்பிலும் கலக்கல்**


இப்போட்டியில் பந்து வீச்சில் மட்டுமல்லாமல் களத்தடுப்பிலும் முரளிதரன் ஜெலித்தார். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் வில்லியம்ஸ், சந்தர்போல் ஆகியோர் உயர அடித்த பந்துகளை ஓடிவந்து சரியாக கணித்து சிறப்பாக



கப் பிடி எடுத்தார் முரளிதரன். இப்போட்டியில் முரளிதரனுக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்படும் என எதிர்பார்த்தபோதும் அதிரடியாக 50 ஓட்டங்களை எடுத்த பி.ஏ.டி .சில்வாவுக்கு அவ்விருது வழங்கப்பட்டது.

(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-48



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | 7 | 9 | 8 | | 9 | 3 | | 4 | 2 |
| | 4 | 8 | 6 | 9 | 2 | 1 | | 9 | 7 |
| | 2 | 6 | | 4 | 1 | | 7 | 8 | |
| | | | | | 3 | 2 | 1 | 7 | 9 |
| | 4 | 1 | | 1 | 5 | 4 | | 1 | 6 |
| | 7 | 5 | 1 | 9 | 8 | | | | |
| | | 9 | 2 | | 7 | 9 | | 8 | 9 |
| | 1 | 2 | | 2 | 4 | 5 | 3 | 1 | 7 |
| | 3 | 4 | | 7 | 6 | | 1 | 2 | 4 |

## யாழ்.குடாநாட்டுக்கு ஏ-9...

தொடரணி 350 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப்பொருட்களை எடுத்துச் சென்றதுடன் வடபகுதி விளைபொருட்களும் தென் பகுதிக்கு எடுத்து வரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாளை யாழ்.குடாநாட்டுக்கு புறப்படும் இரண்டாவது வாகனத் தொடரணியில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள், பழ வகைகள், மென்பானங்கள், அடங்கலான பொருட்கள் அனுப்பப்படவுள்ளன.

இராணுவத்தினரின் கண்காணிப்புடன் வெலிசறை களஞ்சியத்தில் அவை லொறிகளில் ஏற்றப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை யாழ்ப்பாணம், கைதடி, நாவற்குழி களஞ்சியத்தில் யாழ்.விவசாயிகள் மற்றும் மீனவர்களின் உற்பத்திப் பொருட்கள் கொழும்புக்கு அனுப்புவதற்காக திரட்டப்பட்டு வருவதாகவும் ஆணையாளர் கூறினார்.

இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து 60 ஆயிரம் கிலோ எடையுள்ள, மீன், இறால், கிழக்கு அடங்கலான யாழ்.மக்களின் உற்பத்திப் பொருட்கள் கொழும்புக்கு எடுத்துவரப்படவுள்ளன என்றார் அவர்.

(மற்றொரு செய்தி உள்ளே) (ச-5)

## வெதுப்பக உணவுப்பொருள்...

வைத்துள்ளனர். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 176 பேரில் 123 பேர் பாடசாலை மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் உணவை உட்கொண்ட 62 வயது டைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் களில் சிலர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை வைத்தியசாலையின் மக்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஞானகுணாளன் தெரிவித்ததாவது,

இன்றுகாலை (நேற்று) பாடசாலை மாணவர்கள் பலரை பெற்றோர்களும் ஆசிரியர்களும் வைத்தியசாலையில் அனுமதித்தார்கள்.

இது தொடர்பாக நாம் ஆராய்ந்தபோது 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 4பேர் மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் போது திருகோணமலையிலுள்ள ஒரு வெதுப்பகத்தில் 15 முட்டை பணிஸ், கறி பணிஸ் வாங்கி யிருக்கிறார்கள்.

அதைச் சாப்பிட்ட அவர்கள் மிகுதியை வைத்து இரவும் சாப்பிட்டுள்ளனர். அதன் பின்னர் 23ஆம் திகதி காலையில் அவர்களுக்கு வயிற்றோட்டம்,வயிற்றுளைவு, சத்தி ஏற்பட்டதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அவர்களில் ஜீவநாயகம் துரைரட்ணம் (வயது 62) மரணமடைந்துள்ளார். இதையடுத்து வெதுப்பகங்களின் உணவை உட்கொண்டு தலைசுற்று, வயிற்றோட்டம் போன்றன ஏற்பட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

இன்று (நேற்று) மதியம் வரை 129 பேர் இவ்வாறு அனுமதிக்கப்பட்டார்கள். இவர்களில் இருவரே கடுமையான நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தார்கள்.

முதலில் அனுமதிக்கப்பட்ட மீனவர்கள் நான்கு பேரில் ஒருவர் மரணித்தார். ஏனைய மூன்று பேருக்கும் இன்னமும் வயிற்றுளைவும், சத்தியும் இருந்து கொண்டிருக்கின்றது.

பாடசாலை மாணவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். அவர்களை நாளை (இன்று) வீடுகளுக்கு அனுப்புவோம் என்று தெரிவித்துள்ளார்.

(ச-14)

## மனித உரிமை...

இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா சென்ற அவர் நேற்று முன்தினம் மாலை இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு இலங்கை அரசை வலியுறுத்தினார்.

இலங்கையில் மனித உரிமைக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்க வேண்டுமென்று இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறேன். ஆனால் இதுவரை அரசிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. அதை மீண்டும் வலியுறுத்தப்போகிறேன். இராணுவ நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க முடியும் என்பதே ஐ.நாவின் கருத்தாக இருக்கிறது என்று குறிப்பிட்ட அவர், பொது மக்களின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

(ச-14)

## வன்னி மக்கள்...

அமைக்கப்பட்டுள்ள புதுமாத்தளன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் மக்களது எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக இந்தச் சம்பவம் தொடர்பாக புதுமாத்தளன் வைத்தியசாலை வைத்தியருடன் தொலைபேசியில் உரையாடியபோதும், அருகில் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நிதியுதவி அளிக்கும் பேச்சுவார்த்தைகளின்போது மனித உரிமை மீறல்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கு குறித்து சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் வலியுறுத்த வேண்டுமென மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளதாக ஏ.எப்.பி. செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

(ச-5)

## இந்து அமைப்புகளின்...

கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கைதடி சைவச் சிறுவர் இல்லம் ஆகியவற்றில் உள்ள நலன்புரி முகாம்களுக்கு நேரில் சென்றனர்.

அங்கு சென்ற பிரதிநிதிகள் விசேட பிரார்த்தனையின் பின்னர் உதவிப் பொருட்களை கையளித்தனர். இந்து அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் சார்பில் நல்லை ஆதீன குரு முதல்வர், அர்ச்சகர் குழுவைச் சேர்ந்த மகாலிங்கக் குருக்கள், கிருபானந்தக் குருக்கள், திட்டப்பணிப்பாளர் பிரதீபன், சமூக சேவையாளர் பரமநாதன் உட்பட்ட பலர் நலன்புரி முகாம்களுக்கு சென்றிருந்தனர். இதேவேளை இக்குழுவினர் இன்று ஏனைய நலன்புரி நிலையங்களுக்குச் சென்று உதவிப் பொருட்களை கையளிப்பர்.

(ச-5)



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டிலுள்ள நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கான உதவிப் பொருட்களுடன் இந்து அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் புறப்படுவதற்கு தயாரான நிலையில், அவற்றின் விபரங்களை யாழ்.செயலக திட்டப்பணிப்பாளர் பிரதீபனிடம் நல்லை ஆதீன குரு முதல்வர் கையளிப்பதையும் அருகில் இந்து அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்களையும் படத்தில் காணலாம்.

## சர்வதேசத்தை...

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களை காப்பாற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த அழைப்பை ஏற்று சர்வதேச நாடுகள் பல, போரை நிறுத்தி தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

இத்தருணத்திலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்மை சந்திக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எனவே சர்வதேச சமூகத்திற்கு, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தாம் சந்தித்ததாக எடுத்துக் காட்டுவதற்கே ஜனாதிபதி முயல்கிறார் என பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்தாகும்.

இதனால் குழப்பங்களுடன் நேற்றைய கூட்டம் முடிபின்றி நிறைவடைந்தது. எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நாளை சந்திப்பது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இன்று கூடி முடிபெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

(எ-1)

## 2 கி.மீற்றர்...

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். வன்னிப் போர் நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள படையினர் தற்போது சுமார் 25 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்குள் சிக்குண்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்களைத் தேடுவதற்கான போர் முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (ச-5)

## வான், எறிகணைத் தாக்கு...

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான மாத்தளன்,வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை ஆகிய பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை அகோர ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மாத்தளன் பகுதியில் அதிகளவில் எறிகணைத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு மற்றும் ஆர்.பி.ஜி. உந்துகணைத் தாக்குதல் என்பன செறிவாக நடத்தப்பட்டுள்ளது. இதில் 25 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

அம்பலவன் பொக்கணையில் 18 பேரும் வலைஞர்மடத்தில் 11 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளையில் வலைஞர்மடத்தில் படையினரின் தொலைதூர துப்பாக்கிச் சூட்டு ரவை தாக்கியதில் தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. முள்ளிவாய்க்காலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணையில் உள்ள பச்சைப்புல்மோட்டைப் பகுதிகளில் நேற்று வான்படையினரின் விமானங்கள் 15 தடவைகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இதில் கைக்குழந்தைகளும் சிறுவர்களுமாக 17 பேர் உட்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

மருத்துவமனைக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டவர்களின் உடங்களில் அடையாளம் காணப்பட்டவற்றின் விபரம் வருமாறு,

ம.தேனுஜா (வயது 3), நீ.சுவர்ணா (வயது 13), சு.சந்திரகலா (வயது 17), ப.குகராஜ் (வயது 12),செ.புவித்ரா (வயது 13), செ.வித்ரா (வயது 13), த.மதியினி (9 மாதங்கள்), மி.மதீபன் (வயது 7), கி.தமிழ்நிலவன் (வயது 8), ஐ.சுதீபன் (வயது 7), சு.நீலவாணன் (வயது 13), ம.மதிவாணன் (7மாதம்), க.கதிர்ச்செல்வன் (10 மாதம்), சி.சண்முகநாதன் (வயது 57), க.மேரியூலியற் (வயது 49), கே.ரஜனிகாந் (வயது 29), ர.நிரஞ்சினி (வயது 28), த.மகேந்திரராசா (வயது 42), உதயசாந்தினி (வயது 27), வீ.வீரம்மா (வயது 60), சு.தவமணிறீற்றா (வயது 45), ஜனதீசன் (வயது 7), கி.கணேச நாயகம் (வயது 35), ஏ.நேசமணி (வயது 79), வே.மீனாட்சி (வயது 78), கி.விமலா தேவி (வயது 47),

பி.மூக்கையா (வயது 67), மூ.தவச்செல்வி (வயது 16), ரா.புவனேஸ்வரி (வயது 45), ந.நேசமலர் (வயது 54), ச.கவிதா (வயது 22), இ.நேசமலர் (வயது 29), த.மகேந்திரராசா (வயது 43), ச.தர்மலட்சுமி (வயது 59), மா.செல்வநாயகம் (வயது 49), ஜே.கொன்சாலிஜேஸ் (வயது 42), கே.தர்மினி (வயது 35), கி.விமலேஸ்வரி (வயது 47), ம.சுப்பிரமணியம் (வயது 78), கி.பார்த்தீபன் (வயது 37), கி.நவரட்ணம் (வயது 48), வி.யேசுபாலன் (வயது 85), கே.மகாலட்சுமி (வயது 45) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

ஏனையோரின் பெயர்கள் வெளிவரவில்லை. இதேவேளை புதுமாத்தளன் மருத்துவமனையும் நேற்று தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் மருத்துவப் பணியாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர், நோயாளி உட்பட மூன்றுபேர் காயமடைந்தனர். மருத்துவமனைச் சூழலில் 48 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

புதுமாத்தளன் மருத்துவமனை வாசலுக்குள் படையினரின் ஆர்.பி.ஜி. உந்துகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளையில் புதுமாத்தளன் மருத்துவமனைக்கு முன்பாக நேற்று பிற்பகல் 4.45 மணியள்வில் எறிகண்ண வீழ்ந்து வெடித்துள்ளது.

இதில் 15பேர் காயமடைந்தனர். பின்னர் பிற்பகல் 5.30 மணியளவில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் சிறுவன் ஒருவன் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் 125க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என புதுமாத்தளன் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-1)

உயர் கல்விக்கான சரியான ஆங்கிலம்
(Formal English for academic Purposes)
கற்பதற்கான அனுமதிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.
28.03.2009 காலை 10 மணிமுதல் மாலை 1 மணிவரை நேரில் வரவும்.
04.04.2009 அன்று வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
ANVIL
The seat of formal English
ARASADY AMMAN VEETHY, THIRUNELVELY NORTH.
(2430)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.